# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

VOLUME - 3 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 1
JANUARY 2019 TAMIL & MALAYALAM
ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=




*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.*
*1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.* *1 கொரி 2:15.*

427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பான வாசக குடும்பங்களுக்கு,

பிதா,குமாரன், பரிசுத்தாவியானவரின் நாமத்தில் உங்களுக்கு புது வருட வாழ்த்துதல் கூறுகிறேன்.

இந்த 2019 வருடம் உங்களை மறுபடியும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இரண்டு மாதங்களாக ஸ்டாம்ப் கிடைக்காத நிலை உண்டானதால் பத்திரிகை தயாராகியும் தபாலில் சேர்க்கமுடியாத நிலை ஏற்பட்டதை கடந்த மாத ஜாமக்காரனில் அறிவித்தேன். உடனே பல்வேறு இடங்களிலிருந்து வாசகர்கள் 1000,500,200,100, என்று 1 ரூபாய் ஸ்டாம்புகளை அனுப்பியிருந்தார்கள். சிறு துளி பெருவெள்ளம் என்பது போல் எனக்கு அனுப்பிய ஸ்டாம்புகள் தேவைக்கு அதிகமாகவே வந்துசேர்ந்தன. அனுப்பிய யாவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை கூறிக்கொள்கிறேன். இன்னும் சில வாரத்திலேயே ஸ்டாம்ப எங்கள் தபால் ஆபிஸ்க்கே வந்துசேர்ந்துவிடும் என்று தபால் ஆபீஸில் அறிவித்தார்கள். ஆகவே இனி யாரும் ஸ்டாம்புகள் அனுப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2018 வருடம் முழுவதும் (M.O., D.D. Online Money Transfer, NEFT) காசோலை மூலமாக காணிக்கைகளை அனுப்பி பத்திரிகை ஊழியத்தையும்,**மற்ற ஊழியங்களையும்** குறையில்லாமல் தடையில்லாமல் நிறைவேற்றிட உதவிய எல்லாருக்கும் நன்றி கூறுகிறேன்.

2018ம் வருடத்தில் ஒவ்வொரு வாரமும் பல்வேறு நகரங்களில், கிராமங்களில் நடந்த என் ஊழியத்தை அபிரிமிதமாக ஆசீர்வதித்த கர்த்தருக்கு கோடானகோடி நன்றிகளை ஏறெடுக்கிறேன்.



## குடியரசு தின வாழ்த்துக்கள்

இந்திய மக்களாகிய வாசகர்கள் யாவருக்கும் இந்திய குடியரசு நாளின் வாழ்த்துதலை தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய மக்களால் இந்திய மக்களைக்கொண்டு நம்மை நாமே ஆளும் நிலையை உருவாக்கின இந்திய நாட்டு தியாகிகளுக்காகவும் கடவுளிடம் நன்றி கூறி நம் பாரத தேசத்துக்காக சமாதானத்துக்காக ஜெபிப்போம்.

# JANUARY - 2019

கடந்த வருடம நடந்த ஒரு கன்வென்ஷனும் சோடை போகாமல், கூட்டங்களில் கலந்துக்கொண்ட அனைத்து மக்களையும் கர்த்தர் ஆசீர்வதித்து, **சுகப்படுத்தி** பிசாசின் பிடிகளில் இருந்து மக்களை விடுவித்து கூட்டங்களை ஆசீர்வதித்த தெய்வத்தை துதிக்கிறேன். கூட்டங்களுக்கு ஒத்துழைப்பு நல்கிய **பிஷப்மார்க்கும்,** ஆயர்களுக்கும், **சபை நிர்வாகிகளுக்கும்** நன்றி கூறுகிறேன். கர்த்தருடைய நாமம் மட்டும் மகிமைப்படுவதாக.

2019 ஜனவரி முதல் தேதி ஆராதனையில் பங்கெடுக்க இந்தமுறை ஒரு கிராம சபைக்கு நானும் என் மனைவியும் அந்த ஆராதனையில் பங்கெடுத்தது அவர்களுக்கு மிகுந்த சந்தோஷம். எங்களுக்கும் மனத்திருப்தி உண்டானது. என் மனைவியின் இரண்டு கால் முட்டியும் தேய்ந்து நடக்க இயலாதுபோனதால் ஆபரேசன் செய்து இரண்டு முட்டிகளுக்கு ஸ்டீல் வைத்து தைத்தார்கள். 3 மாத முட்டி பயிற்சிக்குபின் முதன்முறையாக ஊழியத்துக்காக வீட்டைவிட்டு வெளியே வந்தது இதுதான் முதல் தடவை. வலியில்லாமல் பழையதுபோல நடக்க வைத்த தேவனை நாங்கள் துதிக்கிறோம்.

## புதுவருட வாக்குத்தத்தம்

கடந்த மாதம் ஜாமக்காரனில் வருடம் ஒரு வாக்குதத்தம், ஆசீர்வாத வாக்குதத்தம் என்று எல்லா மெயின் லைன் ஆலயத்திலும் பல பெந்தேகோஸ்தே சபைகளிலும் வசனத்தை அட்டையில் அச்சடித்து விநியோகிப்பதை குறித்தும் அந்த **வாக்குதத்தம் கிரியை செய்யுமா?** என்பதை குறித்தும் டாக்டர் சேவியர் அவர்கள் எழுதிய கட்டுரையை ஜாமக்காரனில் வெளியிட்டேன். பலர் அதில் தெளிவு பெற்றதாக எனக்கு எழுதி அறிவித்தில் தெய்வத்தை துதிக்கிறேன். அதன் சரியான விவரம் அறியாமல் எவ்வளவு பேர் இருந்திருக்கிறார்கள் என்பதையும் வாசகர்கள் எழுதிய கடிதத்தை வாசித்து ஓரளவு அறிந்துக்கெண்டேன். சிலர் அந்த பகுதியை மட்டும் போட்டோ காப்பி எடுத்து சபை மக்களுக்கு விநியோகித்துள்ளனர். அவர்களுக்காக தெய்வத்தை துதிக்கிறேன். இந்த 2019 வருட துவக்கத்தில் அதே வாக்குத்தத்ததைப்பற்றி சுருக்கமாக நானும் பகிர்ந்துக்கொள்கிறேன்

**"நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்"** ஆகாய் 2:19ல் இந்த வசனத்தை கர்த்தர் கூறுவதாக வேத புத்தகத்தில் எழுதியுள்ளது. வருட துவக்கத்தில் இந்த வார்த்தையை கேட்பதே பெரும் ஆசீர்வாதமாக நினைப்பவர்கள் ஏராளம். ஆம். உண்மையில் இது நல்ல ஆசீர்வாதமுள்ள வாக்குத்தத்தம் தான். இந்த வசனத்தை கர்த்தர் உங்களுக்கு அறிவிக்க என்னிடம் சொன்னார் என்று கூறும் மற்ற ஊழியர்களைப்போல பொய் சொல்லமாட்டேன்.

இந்த வாக்குத்தத்ததை **நீங்கள் யாவரும்** சொந்தமாக்கிக்கொள்ளலாம். ஆனால் இந்த வாக்குத்தத்தம் **உங்களுக்கு நிறைவேறவேண்டுமானால்** நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை அறியாமல்போனால் இந்த வசனத்தை நீங்கள் மனப்பாடம் செய்துகொள்வதாலேயும் இந்த **வசன அட்டையை** வேத புத்தகத்தில் அல்லது உங்கள் **மணிபர்சில் வைத்துக்கொள்வதாலும்** ஒரு பிரயோஜனம் உண்டாகப்போவதில்லை.

இப்போது இந்த குறிப்பிட்ட ஆசீர்வாத வசனத்தை கர்த்தர் ஜனங்களிடம் கூறும்முன் கர்த்தர் நேசித்த அந்த மக்கள் என்ன செய்தார்கள் என்பதை ஆகாய் 1:2 அதிகாரங்களில் வாசித்து பாருங்கள். இவர்கள் **கர்த்தரை தேடாமல்** தங்கள் **சொந்த இஷ்டப்படி** வாழ்ந்தார்கள். ஆலயத்தைக்குறித்து அவர்களுக்கு அக்கரையில்லை. **கர்த்தருடைய வசனத்தின்படி** அவர்கள் ஜீவிக்கவில்லை. அவரவர் தன் இஷ்டப்படி வாழ்ந்தார்கள். கர்த்தரை பல விஷயங்களில் வேதனைப்படுத்தினார்கள்.

அதனால் கர்த்தரின் கோபம் அவர்கள்மேல் எழுந்தது. தன் மக்களையே **கர்த்தர் தண்டித்தார். ஆசீர்வாதத்தை** இழக்கபண்ணினார். நாட்டில் **மழையை** உண்டாகாமல் இருக்க வானத்தை அடைத்தார். **பூமி எங்கும் வறட்சி** உண்டானது. **விளை நிலங்கள்** முதல் **மிருகங்கள் வரை** பஞ்சமும், வறட்சியும் உண்டுபண்ணினார்.

கஷ்டப்பட்டு சம்பாதித்து **கைநிறைய கூலியை** அவர்கள் சம்பாதித்தாலும் **சம்பாதித்த பணத்தை அவர்களால் அனுபவிக்க முடியவில்லை.** அதைப்பற்றி தீர்க்கதரிசி கூறும்போது அவர்கள் சம்பாதித்த

பணத்தை **பொத்தலான பையிலேயே** போடுகிறவர்களாய் காணப்பட்டார்கள். (ஆகாய் 1:6) என்று கூறுகிறார்.

நம்மில் பலருக்கு எவ்வளவு சம்பாதித்தாலும் **தரித்திரம் போகவில்லை.** எவ்வளவு பணம் வந்தாலும் **வீட்டு செலவுக்கு போதவில்லை.** இவர்களால் **பணம் சம்பாதிக்க முடிந்தது.** ஆனால் அதை சந்தோஷத்தோடு **அனுபவிக்க முடியவில்லையே. ஆசீர்வாதம் பொத்தலான பையின் வழியே** வீணாய்போகிறது. இதே நிலைதான் அந்த காலத்தில் ஆகாய் தீர்க்கதரிசியின் காலத்திலும் உண்டானது.

2018ம் வருடம் உங்களில் சிலருக்கு அப்படித்தானே அமைந்தது. ஒன்றுக்கு இரண்டு பேர் சம்பாதிக்க தொடங்கினாலும் பணம் மீதியாகவில்லை. புதிய புதிய செலவுகள் பெருகி கொண்டேபோகிறது. **பணக்குறைவு** வந்தாலே **முறுமுறுப்பும்,கோபமும் உண்டாகும்.** அதன் விளைவு **வாயின் வார்த்தைகளினாலே** சமாதானம் இழக்கிறீர்கள். ஒரே வீட்டில் வாழ்ந்துகொண்டு **ஒருவர் மனதை ஒருவர் வேதனைப்படுத்தும்** வார்த்தைகளினால் **தாக்கிக்கொள்கிறார்கள்.** வீட்டில் சந்தோஷம் இழந்து கலகலப்பாக **சிரித்து மகிழ்ந்த குடும்பத்தில்** சிரிப்பு சத்தம் அறவே நீங்கி **சாவு வீட்டைபோல** வீட்டில் **மயான அமைதி** ஏற்பட்டுவிட்டது. உடனே **காரணத்தை** கண்டுபிடியுங்கள். வீட்டில் எல்லாரும் அமர்ந்து ஒருவருக்கொருவர் பேசி பிரச்சனைகளின் காரணத்தை முதலில் யார் மீதும் பழிபோடாமல் **கர்த்தரை** எந்தெந்த விதத்தில் **வேதனை படுத்தியிருக்கிறோம்** என்பதை கண்டுபிடித்து ஓட்டையைஅடையுங்கள். அப்போது தான் ஆசீர்வாதம் வீட்டில் தங்கும்.

### கர்த்தருக்கு முதல் இடம் கொடுங்கள்

அவரவர்கள் தங்களை தாங்களே பரிசோதனை செய்து அவரவர் குறைகளை கண்டுபிடித்து சரிப்படுத்துங்கள். தற்பரிசோதனை செய்து ஆவிக்குரிய தீர்மாணங்கள் எடுங்கள். அதன்பின்தான் ஆகாய் 2:19ம் வசனத்தில் கூறியபடி **நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்** என்று ஆண்டவர் கூறிய வார்த்தை உங்கள் வாழ்க்கையில் **உண்மையாக மாறும்.** இந்த மாதத்திலிருந்து வியாபாரத்தின் வருமானத்தில் அல்லது கூலிப்பணத்தில் மாத சம்பளத்தில் அல்லது வயல் விளைச்சலில் **பெரும் ஆசீர்வாதத்தை** காண்பீர்கள். **பண சேமிப்பு** உண்டாக செலவுகளை குறையுங்கள், நஷ்டங்கள் லாபமாக மாறும். சிலருடைய குடும்பத்தில் ஒரு வியாதி ஒருவருக்கு சுகமானால் மற்றொரு வியாதி வீட்டில் வேறு யாரையாவது தாக்கும். கர்த்தரின் ஆசீர்வாதம் வியாதி படுக்கையில் படுப்பது மாறும். **ஒருவருக்கு வைத்திய செலவு** குறைந்து பணம் மீதியாகும் பல **வருடங்களாக கட்டிமுடிக்காத** வீட்டு பணி பூர்த்தியாகும்.வேலை விஷயத்தில் கர்த்தர் **புதிய வழி** திறப்பார். அந்த வேளையில் முன்பை காட்டிலும் சம்பளம் குறைவு என்றாலும் செலவுகள் **உண்டாகாத மனநிறைவும்** வீட்டில் சமாதானமும் நிச்சயம் உண்டாகும்.

கர்த்தரின் ஆசீர்வாதம் வீட்டில் தங்கினால் **திருமண தடைகள்** நீக்கும். பல மாதங்களாக **வீட்டில் இழந்த** சிரிப்பின் சத்தம் திரும்ப கேட்கும் **தமாசும்** கலகலப்பும் மீண்டும் வீட்டில் மலரும். எப்போது மலரும்?.

மேலே கூறிய ஆலோசனையின்படி உங்களை நீங்களே **தற்பரிசோதனை** செய்து **மனந்திரும்பி** வசனத்துக்கு நேராக **உங்கள் மனதை செலுத்தினால்** அப்போதுதான் இந்த வாக்குதத்தம் **இந்த புதுவருடத்தில்** மட்டுமல்லாமல் வரும் காலமெல்லாம் நிறைவேறும்.

**"என்னை கனம்பண்ணுகிறவனை நான் கணம்பண்ணுவேன். என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள்"**.1 சாமு. 2:30

**"நான் இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன்"** என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகாய் 2:19

கர்த்தருடைய கிருபை வாசகர்களாகிய உங்களோடும் உங்கள் குடும்பத்தோடும் எப்போதும் நிலைத்திருப்பதாக என்று நான் ஒரு **ஊழியக்காரனாய்** உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

**டாக்டர் புஷ்பராஜ்**

# வாசகர்கள் அறிய வேண்டிய விவரம்....

- ☐ என் ஊழியத்தை தொடர்ந்து தாங்குகிற உங்கள் அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.
- ☐ வெளிநாட்டில் வாழும் வாசகர்களுக்கு அறிவிப்பது என்னவென்றால் நீங்கள் உங்கள் Email ID அனுப்பினால் ஒவ்வொரு மாதமும் **ஜாமக்காரன் பத்திரிகையின்** முழு பகுதியும் அப்படியே உங்கள் E-mail ID மூலமாக அனுப்புவேன். அதை அப்படியே PDF மூலமாக டவுன்லோடு செய்து அதை புத்தகமாக்கி **வீட்டில்** உள்ளவர்கள்,**சபையில்** உள்ளவர்களுக்கு நீங்கள் விநியோகம் செய்யலாம். எனக்கும் வெளிநாட்டுக்கு அனுப்பும் ஜாமக்காரன் பத்திரிகைக்கு செலவிடும் ஸ்டாம்புக்கான பெரும் பணத்தொகை செலவு எனக்கு குறையும். இதுவும் என் ஊழியத்துக்கு நீங்கள் செய்யும் பெரும் உதவியாகும்.

**ஜாமக்காரனை வேண்டாம்** என்பவர்கள் அப்படியே கவர்மேல் புது ஸ்டாம்ப் எதுவும் ஒட்டாமல் ஜாமக்காரன் பத்திரிக்கையை எனக்கே திருப்பி அனுப்பினால் உங்கள் விலாசத்தை விலாச பட்டியலிருந்து நீக்கிவிடுவார்கள். ஆனால் ஜெப குறிப்பிலிருந்து பெயர் நீக்கப்படாது. தொடர்ந்து வாசகர்களுக்காக ஜெபிக்கிறோம்.

## ஜெப குறிப்புகள்

- ☐ **தொலைபேசியை** உபயோகிக்காமல் உங்கள் **ஜெப குறிப்புகளையும்** வேத வசன **சந்தேகங்களையும்** கூடியவரை **கடிதம் வழியாக** அல்லது E-mail மூலமாக எனக்கு எழுதி அனுப்புங்கள். **தொலைபேசியில்** என்னை தொடர்புகொள்ள முயன்றவர்கள் லைன் கிடைக்காமல் **சலித்துப்போனார்கள்.** எப்போது பார்த்தாலும் என் தொலைபேசி நெம்பருக்கு **தொடர்பு லைன் கிடைப்பதில்லை** என்ற குற்றச்சாட்டு வெகு காலமாக உண்டு.

அதனால் நீங்கள் எனக்கு எழுதும் கடிதத்தில் உங்கள் **தொலைபேசி** அல்லது **கைபேசி** எண்களை குறிப்பிட்டால் எனக்கு நேரம் கிடைக்கும்போது **நானே உங்களை** அழைத்து **தொலைபேசி வழியாகவே** நான் உங்களுக்காக ஜெபிப்பேன். இப்போது பெரும்பாலானவர்கள் அந்த வழியைதான் பின்பற்றுகிறார்கள்.

ஊழியத்துக்கு சென்று நான் வீடு திரும்பிய உடன் கடிதத்தில் குறிப்பிட்டு உள்ள தொலைபேசி எண்ணில் ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொருவரோடும் நான் பேசி, விசாரித்து அவர்களுக்காக ஜெபித்து வருகிறேன்.

- ☐ NEFT மூலமாக காணிக்கை அனுப்புபவர்கள் E-mail வழியாக நீங்கள் எனக்கு காணிக்கை அனுப்பிய விவரங்களை அறிவிக்கவேண்டும். என்னுடைய **இரண்டு வங்கிகளில்** (SBI & Canara Bank) எந்த வங்கிக்கு? எவ்வளவு பணம்? எனக்கு அனுப்பினீர்கள் என்ற விவரம் எழுதி உங்கள் **தொலைபேசி எண்ணையும்** குறிப்பிட்டு எழுதினால் **காணிக்கை கிடைத்த விவரத்தை** உடனே உங்களுக்கு தெரிவிக்கவும், தொலைபேசியிலேயே உங்களுக்காகவும் ஜெபிக்கவும் வசதியாக இருக்கும். இந்த குறிப்பிட்ட விஷயத்தில் எனக்கு ஒத்துழைப்பை தாருங்கள் நன்றி.

**சுகம் பெற்றவர்கள் ஜெபத்துக்கு பதில் கிடைத்தவர்கள்** அந்த விவரத்தை எனக்கு அறிவித்தால் உங்களோடு சேர்ந்து நானும் தொலைபேசியிலேயே தெய்வத்தை துதிக்க இயலுமே! தெய்வத்துக்கும் அது மகிமை உண்டாகுமே.!

# கிறிஸ்தவ TV பார்ப்பவர்களுக்கு

மற்ற எல்லா சேனலைவிட தற்போது **நம்பிக்கை TV என்ற சேனலில்** நல்ல **செய்திகள்** நல்ல **நிகழ்ச்சிகள்** வெளிவருகிறது. இரவு 10-00 மணி முதல் 10-30 மணி வரை அந்த நிகழ்ச்சிகளை காணலாம்.

குறிப்பாக **கல்வாரி டெம்பிள் TV** நிகழ்ச்சியில் **சகோ.சதீஷ்குமார்** அவர்களின் செய்தியும், சென்னை பரங்கிமலை **சகோ.ஜெயபால்** அவர்களின் நிகழ்ச்சிகளும் நீங்கள் பார்க்கலாம், அவைகளில் தவறான உபதேசங்கள் எதுவும் இல்லை. மேலும் **அன்னிய பாஷை** கை தட்டல் குதித்து கும்மாளமடிக்கும் **பெண்களின் டான்ஸ்கள்** இப்படிப்பட்ட குப்பைகள் எதுவும் இல்லாமல் **ஆழமான வேத ஆராய்ச்சி**போல்கூட இல்லாமல் **நடைமுறை வாழ்க்கையில் கிறிஸ்தவர்களின் சாட்சியுள்ள வாழ்க்கைக்கு தேவையான நல்ல செய்திகளை** கல்வாரி டெம்பிள் என்ற **TV** நிகழ்ச்சியில் நீங்கள் பார்க்கலாம்.

**இயேசு அழைக்கிறார்,** நாலுமாவடி **சகோ.மோகன்C.லாசரஸ்** ஆகியவர்கள் நடத்தும் கூட்டங்களுக்கு வரும் **ஆட்களின் எண்ணிக்கையைவிட** பன்மடங்கு **லட்சக்கணக்கான மக்கள்** கூட்டம் இவர்களின் சாதாரன **ஞாயிறு ஆராதனைக்கே** கூடுகிறார்கள் என்றால் நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள்.

மற்றவர்களின் கூட்டத்தில் **ஜெபத்தில் பெயர்களை** அழைக்கும் கள்ள ஊழியத்தைபோல் இவர்கள் கூட்டங்களில் ஜெபத்தில் பெயர்களை அழைப்பதில்லை. சுகமளிக்கும் கூட்டம் என்று விளம்பரப்படுத்தி கூட்டங்களை நடத்துவதும் இல்லை. இவர்கள் பணமும் கேட்பதில்லை. ஒரு **செங்கலுக்கு** 5000 கொடுங்கள் என்றோ, **5000 ரூபாய்** ஊழியத்துக்கு காணிக்கை கொடுத்தால் **10 லட்ச ரூபாய்** வீட்டின் கதவை தட்டி கொடுத்துவிட்டு போனார்கள். அதனால் **என் கடன் தீர்ந்தது** என்பது போன்ற **ஆட்களை கவரும்** பொய் சாட்சி **விளம்பரங்கள்** எதுவும் இவர்கள் அறிவிப்பது இல்லை. மக்கள் கொடுக்கும் காணிக்கைகளை இவர்கள் எப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு செலவிடுகிறார்கள் என்பதை வெளிப்படையாக காட்டுகிறார்கள்.

☐ மேலும் **நம்பிக்கை TV சேனலில் CBN ஸ்தாபனத்தார் நடத்தும் நிகழ்ச்சிகள்** மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

அதேசமயம் **நம்பிக்கை TV சேனலில்** வெளி ஊழியர்களின் **பிரயோஜனமற்ற நிகழ்ச்சிகளும்** ஒளிபரப்படுகிறது. எதையெல்லாம் **கள்ள உபதேசம்** என்று நான் ஜாமக்காரனில் எழுதி அறிவித்தேனோ அவைகளும் நமபிக்கை **TV** சேனலில் ஒளிப்பரப்புகிறார்கள். உதரணமாக.: **இயேசு அழைக்கிறார், சகோ.ஜட்சன் ஆபிரகாம். சுகோ.ஸ்டீபன்**, திருச்சி மரித்த **பாஸ்டர் விக்டர் ஞானராஜின் பழைய செய்திகளையும்**

**ஆல்வின் தாமஸ்** போன்ற இன்னும் சிலருடைய **குப்பை பிரசங்கங்களும்** ஒளிப்பரப்புகிறார்கள். அது ஒரு பெரும் குறையாக நம்பிக்கை **TV**யைபற்றி பலர் கூற கேட்டிருக்கிறேன்.

நம்பிக்கை TV சேனல் **மிக நல்ல சேனல்** என்று பெயர் பெற்றதால், **குப்பை பிரசங்கிமார்கள்** போட்டிபோட்டுக்கொண்டு பெரிய தொகை பணம் கொடுத்து தங்கள் நிகழ்ச்சிகளை **விளம்பரத்துக்காகவே** வெளியிடுகிறார்கள். இவர்களின் எந்த பிரசங்கமும் யாருடைய மனதையும் தொடுவதில்லை.

**இவைகள் தவறு** என்று தெரிந்தும் நம்பிக்கை TV நிகழ்ச்சியாளர்கள் ஏன் **இந்த குப்பைகளை** அனுமதிக்கிறார்கள் என்றால் ஒரு நாளில் 24மணி நேர நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப **சேட்லைட் ஸ்தாபனத்துக்கு** பல கோடிகள் **பணமாக கொடுக்கவேண்டும்.** அதை ஒருவரே அந்த சுமையை **எல்லா மாதமும்** தாங்க முடியாது. ஆகவே வேறு வழியில்லாமல் மக்களை கெடுக்கும் **பணக்கார குப்பை பிரசங்கங்களை** வெளியிடும் **நிகழ்ச்சியாளர்கள் கொடுக்கும்** பணம்,நம்பிக்கை TV நிகழ்ச்சியாளருக்கு தேவைப்படுகிறது. வேறு வழியில்லாமல் **நம்பிக்கை TV**யின் ஆவிக்குரிய கருத்துக்கும். அந்த பிழையான ஊழியர்களின் நிகழ்ச்சிகள் **வேத வசனத்துக்கும்** விரோதமாக இருந்தாலும் அவர்களை தங்களுடன் இணைத்து கொள்ளும் நிர்பந்த நிலையில் இருக்கிறார்கள். ஆகவே நம்பிக்கை TV நிகழ்ச்சி சேனலை நீங்கள் காணும்போது அவர்கள் சம்பந்தப்பட்டதல்லாமல் **வேறு நிகழ்ச்சியாளர்களின்** செய்திகள் காட்டப்படும்போது அவைகளை கேட்காதபடி TVயை **ஆப் செய்துவிடுங்கள்.**

இந்த ஆலோசனைகளை **என் ஜாமக்காரன் வாசகர்களுக்காக மட்டும்** எழுதி அறிவிக்கிறேன்.

## BANK ACCOUNT DETAILS :

**Dr. M.G.E. PUSHPARAJ**
SALEM -636 005. INDIA

**STATE BANK OF INDIA**(SALEM-1970)
**A/C No: 10764116842**
SWIFT CODE - SBININBB637- 10764116842
IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842

**CANARA BANK - SALEM**
(SURAMANGALAM BRANCH)
**A/C No: 1219101013622.**
SWIFT CODE - CNRB0001219 -1219101013622.
IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.

**நாம் நம்முடைய சொந்த இராஜ்யத்தற்காக அல்ல கடவுளுடைய இராஜ்யத்தை கட்டும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம்.**
**அநேக ஊழியர்கள் அவர்களுடைய சொந்த இராஜ்ஜியங்களையே கட்டியுள்ளனர்.**

BYM சகோ. **லையனல்**

**குறிப்பு :** BYM மிஷனரி ஸ்தாபனத்தின் முன்னாள் **பொதுசெயலரும்** தமிழ்நாடு அரசின் மின்சார வாரியத்தின் மிக உயர்ந்த அதிகாரியாக பதவி வகித்து ஓய்வு பெற்றவருமான **சகோ. லையனல்** அவர்கள் பெந்தேகோஸ்தே சபை உபதேசத்தில் வைராக்கியம் உள்ளவராகும். ஆனால் அவரே **பெந்தேகோஸ்தே சபையிலும்** அதன் உபதேசத்திலும் **சீர்திருத்தம் மிக அவசியம்** என்ற கருத்தை இந்த கட்டுரை மூலம் வலியுறுத்தியிருக்கிறார். இவரின் சில கருத்துக்களில் ஓரிரு இடத்தில் சிறுமாற்றம் செய்து வாசகர்களுக்கு சமர்பிக்கிறேன். (BYM மிஷனரி ஸ்தாபனத்தின் பொதுக்குழு கூடியபோது இந்த **சீர்திருத்த செய்தியை** துணிந்து பகிர்ந்துகொடுத்துள்ளார். அவரின் இந்த துணிச்சலை நான் பாராட்டுகிறேன்.)

**மார்ட்டின் லூத்தர்** 500 ஆண்டுகளுக்கு முன்பு **சீர்திருத்தத்தை** கொண்டுவந்தார். அதுபோலவே இன்று நமது **சமுதாயத்தில்** (நம்முடைய உபதேசத்தில்) ஒரு சீர்திருத்தத்தை கொண்டுவருவது நமது கடமை.

**கடவுள் எரேமியாவை பிடுங்கும்படி** கட்டளையிட்டார். (எரேமியா. 1:10) கடவுளுடைய வார்த்தையின் அனுமதியின்றி **கட்டப்பட்ட அனைத்து கட்டுமானங்களையும்** இடித்து கீழே தள்ளிவிட கடவுள் விரும்புகிறார். கடவுளுடைய வார்த்தையின் காணப்படாத எதுவும் நம்முடைய பாரம்பரிய உபதேசங்களிலிருந்து **பிடுங்கப்பட**வேண்டியது அவசியம்.

கடவுள் எப்போதும் **பிடுங்கவும்** இழுத்து கீழே **தள்ளவும்** மட்டுமே விரும்பவில்லை. இறுதியில் கடவுள் எரேமியாவிடம் **நாட்டவும் கட்டவும் கட்டளைகொடுத்தார்.** (எரே. 1:10) நாம் நம்முடைய **சொந்த இராஜ்யத்தை** அல்ல. **கடவுளுடைய இராஜ்ஜியத்தை** கட்டும்படிகே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். அநேக ஊழியக்காரர்கள் அவர்களுடைய சொந்த இராஜ்யங்களை கட்டியுள்ளனர். **பாபேல் கோபுரம் (ஆதியாகமம் 11ம் அதிகாரம்) அதை கட்டியவர்கள் தங்களுக்கு பெயர் உண்டாக பண்ணும்படியாக அந்த கோபுரத்தை கட்டினார்கள். (11:4)** ஆனால் கடவுள் **அத்திட்டத்தை தோல்வி** அடைய செய்தார்.

அதேபோல **சவுல் இஸ்ரவேலின் முதல் ராஜா அவன் தனக்கென்று ஒரு ஜெயஸ்ம்பத்தை கட்டினான்.** (1 சாமு. 15:12)

நாம் மற்றவர்கள் முன்பாக நம்மை **முன்னிலைபடுத்தாதவர்களாயும்** நமது சொந்த **இராஜ்ஜியங்களை** கட்டாதவர்களாயும் இருக்கவேண்டும்.

நம்மிடம் மக்களை நாம் இழுத்துக்கொள்ளகூடாது. நாம் **கர்த்தரையே** மகிமைப்படுத்தவேண்டும்.

இத்தகைய **சீர்திருத்தம்** நமது **சபைகளிலும்** தனிப்பட்ட கிருஸ்துவ **அமைப்புகளிலும்** உண்டாக வேண்டும்.

## வரங்களை கையாளுவதில் சீர்திருத்தம்

**வரங்கள்** மக்களுக்கு பரிசுத்த ஆவியானவரால் அவரவர்களின் விசுவாசத்தின் அளவின்படியே பகிர்ந்தளிக்கப்படுகிறது.(1 கொரி 12:11) **வரங்கள் அனைவரது பிரயோஜனத்துக்காக** அளிக்கப்பட்டுள்ளது. (1 கொரி 12:7) கர்த்தருடைய **வார்த்தையை** அல்லது வசனத்தை கூறும் **வரங்களை** நாடும்படி கட்டளை பெற்றிருக்கிறோம். (1 கொரி 12:31)

கடைசியாக கூறப்பட்ட **தீர்க்கதரிசன வரம்** திருச்சபை ஆவிக்குரிய ஜீவியத்தில் வசனத்தில் வளர பியோஜனப்படும். ஆகவே மற்றவர்களைவிட **தீர்க்கதரிசன வரத்தை** கூற விரும்புங்கள் என்று பவுல் கூறுகிறார். (**தீர்க்கதரிசனம்** -என்றால் **கர்த்தருடைய வார்த்தையாகும்.** எந்த வரமும் **கேட்கப்படகூடாது.** அது கர்த்தரால் கொடுக்கப்படவேண்டியது ஆகும்).

**இரண்டுவிதமான** மக்கள் இருக்கிறார்கள். ஒருசாரார் **வரங்களை பயன்படுத்தாதவர்கள்.** மற்றவர்கள் வரங்களை **தவறாக பயன்படுத்துகிறவர்கள்.** ஆவியின் வரங்களை பயன்படுத்தும்படி முதல் குழுவினரை நான் உற்சாகப்படுத்துகிறேன். இல்லாவிட்டால் ஆவியின் வரங்கள் **கடவுளுடைய இராஜ்ஜியத்துக்கு** பிரயோஜனம் இல்லாதபடி **செயல் இழந்துபோய்விடும்.** ஆனால் தற்காலத்தில் அநேக போதகர்களும் விசுவாசிகளும் **வரங்களை தவறாக** பயன்படுத்துவதை காணகிறாம்.

## பரிசுத்த ஆவியன் அபிஷேகம்

மக்களை பரிசுத்த **ஆவியானவரின் நிறைவுக்கு** நேராய் வழிநடத்துகிறதை பொறுத்தமட்டில் **மக்களின் தலைகளை பிடித்து உலுக்குவது**, மக்களிடம் அவர்கள் **அன்னிய பாஷையை** பேசும்படி அவர்களை **பயிற்றுவிப்பதும்** போன்ற **மாம்சமான வழிகளை** தயவுசெய்து இனி உபயோகப்படுத்தாதீர்கள். இத்தகைய முறைகளை நீங்கள் கடைபிடித்தால் அது தவறான நடத்துதல் ஆகும். **பரிசுத்த ஆவியின்** ஞானஸ்நானத்தைபெற **விசுவாசிகள் மீது உங்கள் கைகளை வைத்து அழுத்தாதீர்கள்.** ஆவியானவர் மிகவும் **வேகமாகவும்** மிகவும் **சத்தமாகவும்** மீட்டுகின்ற **இசையை** சார்துள்ளதுபோல தவறாக எண்ணி **இசையை வேகமாக மீட்டாதீர்கள்.** எங்களுடைய ஆரம்ப நாட்களில் நானும் சகோ.லையனல், சகோ. **ஸ்டான்லியும்** ஒரு சபையில் பிரசங்கம் பண்ணுவதற்காக அழைக்கப்பட்டிருந்தோம். அங்கு ஒரு சகோதரன் முரசை(டிரம்) **மிகவும் சத்தமாக** இசைத்துக் கொண்டிருந்தார். என்ன செய்யலாம் என்று நாங்கள் சிந்தித்து அந்த (டிரம்பை) முரசை நாங்கள் **எடுத்து சென்று மேடையில் வைத்துவிட்டு** பிறகு தான் **பிரசங்கம் பண்ண** ஆரம்பித்தோம். **கடவுள் மட்டுமே** நம்மை அபிஷேகம் செய்கிறவர் என்றும் **காதை செவிடாக்குகிற அளவில்** மட்டுமே நம்மை அபிஷேகம் செய்கிறவர் என்றும் தவறாக நினைத்து **காதை செவிடாக்கிற** அளவில் இசைக் கருவியை **மீட்டவேண்டாம்** என்றும் கண்டிப்புடன் தெரிவித்தோம்.

நம்முடைய (**BYM**) கூடுகைகளிலும் **இத்தகைய பழக்கங்கள்** சரிசெய்யப்படவேண்டும். இதுவே **சீர்திருத்தம்.** இயேசுதான் நமக்கு **பரிசுத்தாவியின் திருமுழுக்கு** தருகிறவர். (பரிசுத்த ஆவியை கர்த்தரிடம் கேட்கக்கூடாது அது **மனம் திரும்பினவர்களுக்கு** கர்த்தரால் கொடுக்கப்படுவதாகும். அதுபோலவே **வரங்கள்** எதுவும் **கேட்கப்படகூடாது.** அது கர்த்தரால் கொடுக்கப்படவேண்டியதாகும்.)

ஒரு நபர் **பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படாவிட்டால்** அந்த ஆணையோ, பெண்ணையோ **நீங்கள் ஒருபோதும் வற்புறுத்தாதீர்கள்.** பரிசுத்த ஆவியின்அபிஷேகத்தை பெற முடியாமல் போவதற்கு 100 காரணங்கள் இருக்கலாம். கடவுள் மட்டுமே ஒரு நபரை பரிசுத்த ஆவியானவரால் நிரப்பமுடியும். **நாம் அல்ல.** ( மனிதர்களல்ல) ஆகவே நாம் ஏன் கவலைப்படவேண்டும்? சில சந்தர்ப்பங்களில் பாடல்

**குழு தலைவர்** குறிப்பிட்ட பாடலில் ஒரு பகுதியை மக்கள் பரிசுத்த **ஆவியானவரால் நிரப்பப்பட** மக்களுக்கு **அந்த குறிப்பிட்ட பாட்டு** உதவும் என்று எண்ணி **அந்த பாடலையே திரும்ப திரும்ப** பாடுவதை நாம் பார்த்திருக்கிறோம். மக்கள் ஒருவேளை **பரவசமடைந்து** துள்ளி குதிக்கலாம். ஆனால் அப்படி குதிக்கிறவர் **பரிசுத்தாவியானவரால் நிரப்பப்படவில்லை** என்பதை அறிந்து கொள்ளுங்கள். இந்த பகுதியிலும் நாம் **சீர்திருத்தத்தை கொண்டு வரவேண்டாம். பெந்தேகோஸ்தே நாளில்** இருந்ததுபோலவே அனைத்தும் **இயற்கையாகவும், தன்னிச்சையாகவும்** இருக்கவேண்டும். கடவுளின் வார்த்தையின்டியே **கர்த்தர் கொடுக்கும் வரங்களை கையாள** நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.

## பிசாசுகளை விரட்டுதல்

மாற் 1:34 பலவிதமான வியாதிகளினால் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் **சொஸ்தமாக்கி** அநேகம் **பிசாசுகளை** துரத்திவிட்டார். அந்த **பிசாசுகள்** தம்மை அறிந்திருந்தபடியால் அவைகளை **பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை.**

இயேசு பிசாசுகளை **பேசுகிறதற்கு அனுமதிக்காததை** நாம் இங்கு காண்கிறோம். ஆனால் துரதிஸ்டவசமாக **இந்நாட்களில் பல பாஸ்டர்கள்.** ஊழியர்கள் **பிசாசுகள் பேசுகிறதற்கு உற்சாகப்படுத்தப்படுவதை** நாம் காணலாம். அது ஊழியங்களை மேன்மைபடுத்தும், ஆனால் அது கர்த்தரை மேன்மைபடுத்தாது.

**பிசாசு பொய்களை** மட்டும்பேசும் என்பது நமக்கு தெரியாதா? அதன் மூலம் **பிசாசுகளின் பிரசங்கத்தைதான்** நாம் கேட்க விரும்புகிறோம் என்பது எவ்வளவு வருத்தமான காரியம். மேலும் **கடவுளின் ஊழியக்காரர்கள்** என்று கூறப்படுகிற சிலர் **மக்கள் மீது துப்புவதையும்** நான் பார்த்திருக்கிறேன். இன்னும் சிலர் **பிசாசை விரட்ட துடைப்ப கட்டையினால்** நபர்களை அடித்து அவர்கள் **தலைமயிரை இழுக்கிறார்கள்.** ஒருமுறை பிசாசு பிடித்திருந்த **பெண்ணை** ஊழியக்காரர் ஒருவர் தன் **காலால் மிதிப்பதை** நான் பார்த்தேன். இத்தகைய காரியங்களினால் **பிசாசு ஒரு காலமும் பயப்படுவதில்லை.** இத்தகைய முறைகளை நாம் கடைபிடித்தால் **பிசாசு நம்மை பார்த்து சிரிக்கும்.** ஆனால் அதே சமயம் நமது ஆண்டவராகிய இயேசு **கிறிஸ்துவின் பெயருக்கும்** அவரது **வார்த்தைக்கும் மட்டுமே பிசாசுகள்** பயப்படும். வேறு சில பாஸ்டர்கள், ஊழியக்காரர்களில் சிலர் **பிசாசு பிடித்தவர்களின் தலையில் திருமறையை**(பைபிளை) வைக்கிறார்கள். **திருமறை** நம்முடைய **இருதயத்தில் இருக்க வேண்டும்.** சில பேர் **எண்ணெயையும்,தண்ணீரையும்** பிசாசு பிடித்தவர்களின் **வாயில் ஊற்றுகிறார்கள்.** இத்தகைய **புற மதத்தினரின் பழக்க வழக்கங்கள்** தவிர்க்கப்பட வேண்டும். பிசாசுக்கு எதிர்த்து நிற்கும்படியாகவும் அவைகளை **துரத்தும்படியாகவும் திருமறை** நமக்கு கட்டளையிடுகிறது. மேலும் நமக்கு **அதிகாரமும் கொடுத்திருக்கிறது.**

நாம் தொலைகாட்சி நிகழ்ச்சிகளில் **வரும் போதகர்களையும் வெளிநாட்டு சுவிசேஷகர்களையும்** பின்பற்ற வேண்டியதில்லை. (காப்பி அடிக்க வேண்டியதில்லை) நாம் இயேசுவை மட்டுமே பின்பற்றவேண்டும்.

**யோவான் 12:26 ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னை பின்பற்றகடவன். நான் எங்கே இருக்கிறனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான். ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனை பிதாவானவர் கனம் பண்ணுவார்.**

## தீர்க்கதரிசன வரம்

1 கொரி 14:3 தீர்க்கதரிசனம் (கர்த்தருடைய வசனம்) சொல்லுகிறவனோ மனுஷருக்கு பக்தி விருத்தியும், புத்தியும் ஆறுதலும் உண்டாக தக்கதாக பேசுகிறான்.

**தீர்க்கதரிசனங்கள்** (கர்த்தருடைய வசனங்கள்) பக்தி விருத்திக்காகவும் புத்தி உண்டாக்கவும் பயன்படுத்தபடுகின்றன. ஆனால் இந்நாட்களில் **தீர்க்கதரிசனம்** பெரும்பாலும் **பிறரை ஆறுதல்** படுத்துவதற்காகவே பயன்படுத்தபடுவதை நாம் பார்க்கிறோம். அநேக **ஜெபக்கூட்டங்கள் தீர்க்கதரிசன கூட்டங்களாகவே** மாறிப்போனதை நான் பார்த்திருக்கிறேன். **மக்கள் ஜெபத்துக்காக** கூடுவார்கள் அப்போது ஒருவர் **தீர்க்கதரிசனம் சொல்ல தொடங்குவார்** அங்கே இரண்டு அல்லது மூன்றுபேர் அந்த **தீர்க்கதரிசனத்தை பதிவுசெய்ய தொடங்குவார்கள்.** அப்படிப்பட்ட **பொய்யான தீர்க்கதரிசனங்களால்** நாம் வழிதப்ப கூடாது. **அப்படிப்பட்ட ஊழியங்களை** அவர் செய்கைகளும் **வேத வசனத்துக்கு ஒத்துபோகிறதா** என்று அவைகளை **பரிசோதித்துப்பார்க்க** நாம் கற்றுக்கொள்ளவேண்டும். திருமறை என்னசொல்லுகிறது என்று எப்போதும் நம்மை நாமே கேட்டுக்கொண்டே இருக்கவேண்டும்.

நியாய சாஸ்திரி ஒருவன் இயேசுவிடம் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ள நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்ட பொழுது இயேசு **நியாய பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது** என்று அவனிடம் **எதிர்கேள்வியை** கேட்டார். (லூக் 10:26)

**திருமறையிலிருந்து** (வசனத்திலிருந்து) ஒருபோதும் விலகிசெல்லாதிருங்கள் ஆவியினால் கீழே விழுவது ஆவியில் **சிரிப்பதுபோன்ற** பல விநோதமான புதிய அனுபவங்களும் **பல சபைகளில்** காணப்படுகின்றன. அவைகள் எதுவும் நம் திருமறையில் **நேரடி சான்று** அல்லது **ஆதாரம்** இல்லாதவைகளாகும். இவை போன்ற எல்லா நிகழ்வுகளை குறித்தும் நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

ஆண்டவராகிய இயேசு கூறினார். **எந்த மரமும்** அதன் கனிகளை கொண்டு அறியப்படும் என்றார். நாம் கடைசி நாட்களின் வாழ்ந்துக்கொண்டிருகிறபடியால் **விநோதமான அனுபவங்களால்** நாம் ஏமாந்து போகாதபடிக்கு மிகவும் ஜாக்கிறதையாக இருக்க வேண்டும்.

## கடவுளுடைய வார்த்தையை கையாளுவது சீர்திருத்தம்

2 தீமோ 2:5 நீ வெட்கப்படாத ஊழியக்காராயும் **சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்கிறவனாயும்** உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிறதையாய் இரு.

ஒரு நாணயத்துக்கு **இரு பக்கங்கள் இருப்பதுபோல திருமறையின் சத்தியத்துக்கும்** இரண்டு பக்கங்கள் உண்டு. திருமறையில் காணப்படும் அனைத்து சத்தியங்களும் **ஜோடி ஜோடியாக** அமைந்துள்ளன. ஒவ்வொரு சத்தியத்திற்கும் **தொடர்புடைய** மற்றும் **சம நிலையான** சத்தியத்தை நாம் வேத்தில் கண்டுபிடிக்கவேண்டும். உதாரணமாக **வரங்களும்- கனிகளும், இறையாண்மையும் மனித கடமையும் விசுவாசம் - கிரியையும் போன்றவைகள்** அத்தகைய சத்தியங்களை சமமாக பாவிக்க நாம் அறிந்துகொள்ளவேண்டும். ஒன்றை விட்டு **மற்றொன்றின் மீது நாம் அளவுக்கு மீறி அழுத்தம்** கொடுக்கக்கூடாது. பவுல் அப்போஸ்தலன் எவ்வாறு அழகாக **வரங்கள்** மற்றும் **கனிகளை** குறித்த போதனையை கட்டமைத்துள்ளார் என்பதை கவனியுங்கள். 1 கொரி. 12 மற்றும் 14வது அதிகாரத்தில் ஆவியின் வரங்களைப்பற்றி வாசிக்கிறோம். அதே சமயம் 13ம் அதிகாரத்தில் **ஆவியின் கனிகளை** பற்றி வாசிக்கிறோம்.

1 கொரி 13:1-2 நான் மனுஷர் பாஷைகளையும் **தூதர் பாஷைகளையும் பேசினாலும் அன்பு எனக்கிராவிட்டால்** சத்தமிடுகிற வெண்கலம் போலவும் ஓசையிடுகிற கைதாளம் போலவும் இருப்பேன். நான் **தீர்க்கதரிசன வரத்தை** உடையாவனாயிருந்து சகல இரகசியங்களையும் சகல அறிவையும் அறிந்திருந்தாலும் மலைகளை பேர்க்கதக்கதாக சகல விசுவாசமுள்ளவனாய் இருந்தாலும் **அன்பு எனக்கிறாவிட்டால்** நான் ஒன்றுமில்லை என்று பவுல் கூறுகிறதை கவனியுங்கள்.

**அன்பு இல்லாவிட்டால் அனைத்து வரங்களும் ஒன்றுக்கும் உதவாது போகும்** என்பதை இங்கே காண்கிறோம். நீங்கள் ஏதாவது ஒரு சபையில் அல்லது ஆலயத்தில் பேசும்படி அழைக்கப்படும்போது ஒருபோதும் உங்களை **பிரசங்கிக்க அழைத்தவர்களை** திருப்திப்படுத்த முயற்சிக்காதீர்கள். நீங்கள் ஊழியத்தைப்பற்றி பேசும்போது **குடும்ப வாழ்வை** பற்றி குறிப்பிட மறந்துபோகவேண்டாம். திருமறையில் உள்ள எந்த ஒரு சத்தியமும் **சரியாக போதிக்கப்படவேண்டும். திருமறை தியானமும் ஜெபமும்** மக்களுக்கு வலியுறுத்தப்பட வேண்டிய மற்றொரு முக்கிய பகுதியாகும். ஒன்றின் கிரயத்தில் மற்றொன்றை நாம் புறந்தள்ளக்கூடாது. ஆரம்ப நாட்களில் நான் (சகோ. லைனல்) அதிகமாக **ஜெபிக்கும் வழக்கத்தை** கொண்டிருந்தேன். ஆனால் **திருமறை தியானத்திற்கு** அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அப்போதுதான் என்னுடைய **ஜெப வாழ்க்கையையும் திருமறை தியானத்தையும்** சமமாக பாவிக்கவேண்டும் என்பதை நான் உணர்ந்தேன்.

இன்னும் சமநிலை படுத்தவேண்டிய மற்றொரு பகுதி வாரமும் ஆராதனையும் ஆகும். அநேக சபைகள் **ஒருமணி நேரத்துக்கு** மேலாக (துதி, பலி என்ற பெயரில்) ஆராதனையில் செலவிடுகிறார்கள். ஆனால் **கடவுளுடைய வார்த்தையை** கூறுவதற்கோ மிகவும் குறைந்த நேரத்தையே வழங்குகிறார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைக்காமல் எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன் என்பதை தெரிவித்துள்ளார். அப். 20:27

நாம் கடவுளுடைய **எல்லா ஆலோசனைகளையும்** மக்களுக்கு **அறிவிக்கவேண்டும்.** அப்படி நாம் செய்யாவிட்டால் மக்கள் குழப்பத்துக்கு ஆளாகிவிடக்கூடும். நாம் **தசம பாகத்திற்கு** அதிக முக்கியத்துவம் கொடுத்து **கருணையையும், அன்பையும்** விட்டுவிடும்போது நாம் பிரச்சனைக்கு ஆளாவோம். இந்த குறிப்பிட்ட காரணத்துக்காவே இயேசு பரிசேயர்களை கடிந்துகொண்டார்.

பிசாசு ஆண்டவரை சோதித்தபோது அவர் ஒவ்வொரு சோதனையிலும் **இப்படி எழுதியிருக்கிறதே** என்றார். அதற்கு பிசாசு இயேசு **வசனத்தை சுட்டிக்காட்டி** பேசியதை இவனும் **அதே வழியை** பின்பற்றி பேசுகிறான் என்றார். மீண்டும் பிசாசு வசனத்தை சுட்டிக்காட்டி இப்படியும் எழுதியிருக்கிறதே ன்று திருமறையில் உள்ள **வார்த்தையை** மேற்கோள் கட்டியபோது இயேசு மேலும் வேறு **ஒரு வசனத்தை** சுட்டிக்காட்டி இப்படியும் **எழுதியிருக்கிதே** என்றார். (மத் 4:4-7). பிசாசுக்கும் - இயேசுவிக்கும் இடையே **வசனப் போர்** உண்டானதை நாம் கவனிக்கவேண்டும். **சரியான வசனத்தை** சுட்டிக்காட்டி **பிசாசின் வாயை** இயேசு அடக்கினார்.

**எழுதியிருக்கிறது** என்று நாம் அறிந்துகொள்வதும் மட்டுமல்ல, **மாற்று கருத்துள்ள வசனத்தையும் அறிந்து** என்ன எழுதியிருக்கிறது என்பதையும் தெரிந்திருக்கவேண்டும்.

திருமறை **வசனங்களை** திருமறை **வசனங்களோடு** மட்டுமே ஒப்பிட்டு பார்க்கவேண்டும். ஒரு போதகர் திருமறையில் உள்ள **ஒரே ஒரு வசனத்தின்** அடிப்டையில் தன்னுடைய முழு பிரசங்கத்தையும் உபதேசத்தையும் உருவாக்குவாரானால் அத்தகைய உபதேசத்தை கேட்க்கும்போது உங்களை நீங்கள் இழந்துவிடாதபடி நீங்கள் உங்களை காத்துக் கொள்ளுங்கள். திருமறையில் உள்ள **மற்ற வசனங்களோடு** ஒப்பிட்டு பார்த்து ஒட்டு மொத்தமாக சத்தியம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ன என்பதை தெரிந்து கொள்ளவேண்டும்.

**ஆரோக்கியத்தையும், செல்வத்தையும்** செழிப்பை பற்றி பிரசங்கிக்கும் போதகர்கள்

அடிக்கடி மேற்கோள்காட்டும் பகுதி **3 யோவானில் 2 ஆசீர்வாதங்கள்** முக்கியப் படுத்துவார்கள். ஆனால் நாம் பெற்றுக்கொள்கிற **ஆசீர்வாதங்களைவிட** நம்மை **ஆசீர்வதிப்பவர்தான் முக்கியமானவர்** என்பதை மறந்து **அந்த வசனத்தை** மட்டும் வெளியே எடுத்து அதை நமக்கு சாதகமாக உபயோகிக்கக்கூடாது. நாம் ஒரு வசனத்தை **விளக்கிகூறும்முன்** அது சொல்லப்பட்ட **சரியான சூழல்** என்ன என்பதை கண்டுபிடிக்க வேண்டும். அதன் அடிப்படையில் தான் **அந்த வசனத்தின் அர்த்தத்தை** விளங்கிக் கொள்ளவேண்டும்.

வேறொரு வகையான போதகர்கள் **கூடுதலான கிருபை** (Hyper Grace) என்பதை குறித்து உபதேசித்து வருகிறார்கள். அவர்களது போதனையின் **கருப்பொருள் உங்கள் விருப்பம்போல் வாழுங்கள்** என்பதாகும். அப்படிப்பட்ட அவர்கள் கடவுளின் **கருணையை** மேற்கொள்காட்டி **துன்மார்க்கத்தை** உற்சாகப்படுத்தி வருகிறார்கள். **ரோமர் நிருபத்தின் ஆறாம் அதிகாரத்தின்** முதல் வசனத்தை மேற்கோள்காட்டி **இரண்டாம் வசனத்தை** புறகணித்துவிடுகிறார்கள்.

**கிருபை** இலவசமானது ஆனால் **மலிவானது அல்ல.** இது கடவுள் **பரிசுத்தமானவர்** அதே சமயம் **அவர் பயங்கரமானவர்** என்ற உண்மையை மறந்து அவருடைய **கிருபையை** தவறாக பயன்படுத்துவதாகும். அவர் இந்த உலகத்தை நியாயம் தீர்க்க மீண்டும் வரப்போகிறார். நாம் செய்த கிரியைகளுக்கு தக்கபடி நமக்கு பலன் அளிக்கப்படும்.

**எழுப்புதலுக்கும்** திரும்ப கட்டுதலுக்கும் **சீர்திருத்தத்திற்கும்** திருமறையே **திறவுகோல்.** நம் வாழ்க்கைக்கு அதுவே **வழிகாட்டி** நம்முடைய எல்லா ஆவிக்குரிய அனுபவங்களுக்கும் அந்த வசனங்களையே உன்னிப்பாக கவனித்து வருகிறோம். மக்கள் இதத்கைய **புதுமையான காரியங்களில்** மிகவும் ஆர்வமுள்ளவர்களாய் காணப்படுகின்றனர். இப்படிப்பட்ட நேரங்களில் எல்லாவித **அனுபவங்களுக்கும்** நமக்கு அடிப்படையானது **திருமறைதான்** என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. எந்த எழுப்புதலும் **சீர்திருத்தமும்** திருமறையின் அடிப்பயாக கொண்டிருக்கவேண்டும். அனைத்து ஆவிக்குரிய நடவடிக்கைகளுக்கும் திருமறை மட்டுமே நடுநாயகமானது.

கடவுளின் மிகப்பெரிய மனிதர்கள் யாவரும் எப்போதும் திருமறையின் மக்களாகவே இருந்திருக்கிறார்கள். நாமும் எப்போதும் **திருமறைக்கு நேராக திரும்ப வேண்டும்.**

500 ஆண்டுகளுக்குமுன் **மார்ட்டின் லூத்தர்** காலத்தில் **ஒரு சீர்திருத்தம்** ஏற்பட்டது. ஆனால் இந்நாட்களில் **கிறிஸ்தவர்களிடமே** அதிகமான **வழி விலகலும். பின்மாற்றமும்** ஏற்பட்டுள்ளதை காண்கிறோம். மக்கள்கடவுளுடைய வார்த்தைவிட்டு **வழிவிலகி** சென்றுகொண்டிருக்கிறார்கள். **சபைக்குள்ளும் கிறிஸ்துவ அமைப்புகளுக்குள்ளும் உலகம் நுழைந்துவிட்டது.** நாம் திருமறை சார்ந்த தரத்தை இழந்துவிட்டோம். நாம் எங்கே இருக்கவேண்டும் என்று கடவுள் விரும்புகிறாரோ அந்த இடத்தில் நாம் இல்லை. இந்த நாட்களிலும் **சீர்திருத்தவாதிகள்** வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார். அவர் நம்மை பயன்படுத்தி அவரது சபையை மகிமையால் நிரப்ப விரும்புகிறார். இயேசு கிறிஸ்துவின் **இரண்டாம் வருகைக்கு** நம்மையும் பிறரையும் ஆயத்தப்படுத்துவோம். இன்று நமக்கு மற்றொரு **சீர்திருத்தம் தேவை**! மாரநாதா.!

# சாட்சியில்லா செய்திகளும், ஆலோசனையும்

## C.S.I மாடரேட்டர் ஜெயிலில் அடைக்கப்பட்டார்

Krishna - Godavari C.S.I. Dioces (ஆந்திரா)



Most Rev. Govada Devasirvatham ஓய்வுபெற்ற மாடரேட்டர் அவர்கள் ஆந்திராவில் உள்ள **ஏலூர்** என்ற ஊரில் உள்ள மிஷனரிகள் வாங்கிகொடுத்த CSI உயர்நிலைபள்ளியின் **நிலத்தை** விற்றதில் ரூபாய் **7 கோடி ரூபாய்** தன் கணக்கில் வரவு வைத்து ஊழல் செய்ததாக கூறப்படுகிறது.

இதை தவிர ஏராளமான ஊழல் வழக்குகள் இவர் பெயரில் நிலுவையில் உண்டு நீண்ட காலத்துக்குமுன் நடந்த கொலை வழக்கிலும் சம்பந்தம் உண்டு என்றும் கூறப்படுகிறது.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் கர்த்தர் இவருக்கு நல்ல **பிரசங்கிக்கும்** தாலந்தை கொடுத்திருந்தார். ஆந்திராவில் சில ஆயர்கள் இவரைப்பற்றி என்னிடம் கூறும்போது மாடரேட்டர் அவர்கள் **ஆயர்கள்** கூட்டத்தில் பேசும்போது (Clargies Retreat) இவர் **ஆயர்கள் எப்படியிருக்க வேண்டும்** என்பதை குறித்து பேசுவதை கேட்கவே சிலர் ஆயர்கள் மிகவும் ஆசைப்படுவார்களாம்.

இவர் CSI **சினாட் செக்ரட்டரியாகவும்** இவர் பதவி வகித்தவராகும். கொஞ்ச காலம் தூத்துக்குடி CSI டையோசிஸ்க்கு பிஷப் பொறுப்பில் இருந்தார்.

டையோசிஸ்ஸிலோ, சபையிலோ **பிஷப்** அல்லது **ஆயர்கள்** ஆனாலும் அல்லது **மாடரேட்டர் ஆனாலும்** ஊழல்கள் செய்தவர்.. ஆலய நிலம்- பள்ளிக்கூட நிலம் விற்றவர்கள் ஆகிய அனைவரும் அதன் விளைவை கண்டிப்பாக அனுபவிப்பார்கள்.

பலர் இப்போதும் நம் கண்முன்பே அப்படிப்பட்டவர்கள் பலர் இப்போதும் அனுபவித்துக் கொண்டிருக்கும் **தேவ தண்டனையை** நாம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம் என்றாலும் பலர் துணிந்து ஊழல்செய்து **அகப்பட்டுக்கொள்கிறார்கள், சாட்சியையும் இழக்கிறார்கள்.**

**சென்னை பிஷப்** அவர்களும் பெரும் தொகையை கொடுத்துதான் பிஷப் பதவியை விலைக்கு வாங்கினார் என்று பேசிக்கொண்டதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஊழியத்தையும் பரிசுத்தாவியையும் இப்போது **விலைக்கு விற்பவர்கள்** உண்டு. அதை விலைக்கு வாங்க ஒரு கூட்டமும் உண்டு. உண்மையில் அப்படி இவைகளை விலைக்கு வாங்க முடியுமா என்பதை இவர்கள் யோசிப்பதில்லை. அப்படி விலைக்கு வாங்கப்பட்ட பதவி, சரக்கு நிச்சயமாக பிசாசு விற்றதாகும். அது பரிசுத்தாவியாக இருக்க முடியாதே!.


இப்படி சபை தலைவர்களை குறிப்பாக **பிஷப் - மாடரேட்டர்களின்** ஊழல்களைப்பற்றி ஜாமக்காரனில் நான் வெளியிடுவதால் **இப்போதுள்ள மாடரேட்டர்** என்னை மிகவும் வெறுக்கிறார். ஆனால் ஜாமக்காரனில் இவைகளை வெளியிட்டதால்தான் சபை மக்களின் பெரும்பாலானவர்களுக்கு விழிப்புணர்வு உண்டாகியுள்ளது. குறிப்பிட்ட இரண்டு டையோசிஸ்களில் **நிலத்தை விற்க அட்வான்ஸ் கொடுக்கப்பட்டதை** கேள்விப்பட்ட சபை மக்கள் திரண்டு எழுந்து அந்த அட்வான்ஸை திரும்பப்பெற்று நிலம் விற்பதை தடுத்துவிட்டனர். இதனால் **பிஷப்பின் கோபம்** ஆயர்மேல் பாய்ந்தது. ஜாமக்காரனில் நிலம் குறித்து நான் எழுதின என் எழுத்தின் மூலம் **மிஷனரிகள் வாங்கிபோட்ட**

நிலம் விற்பது தடுக்கப்ட்டது. வேறு சிலர் **பத்திரத்தில்** சிறிய தொகையை காட்டி **பெரும் தொகைகளை** தலைமையில் உள்ளவர்களும் நிர்வாகிகளும் பங்குபோட்டுக்கொள்வதை தடுக்க காரணமாக இருந்த ஜாமக்காரனையும் என்னையும் எந்த **பிஷப்** இஷ்டப்படுவார்கள்.? **இதுதான் இன்றைய நிலை.** இப்போது CSI - மார்தோமா சபை விசுவாசிகள் நான் எழுதியதை விளங்கிக் கொண்டு நம் **சபை, கல்லூரி சொத்துக்களை விற்கும்போது** சபை மக்கள் ஜாக்கிறதையாக கவனிக்க தொடங்கிவிட்டனர். **பத்திரத்தில்** எவ்வளவு தொகை எழுதப்பட்டுள்ளது - அந்த நிலத்தை **வாங்கியவர் கொடுத்த தொகை** எவ்வளவு என்பதை வெளிப்படையாக கேட்டு அறிந்துகொண்டனர். இப்படி விழிப்போடு இருந்தால் நம் சந்ததியினர் உங்களுக்காக தெய்வத்தை துதிப்பார்கள்.

**ஆந்திரா பிஷப்பும்** முன்னால் CSI **மாடரேட்டருமான** Most Rev.தேவாசீர்வாதம் அவர்கள் **நல்ல பிரசங்கியார்தான்** எல்லா மக்களும் அவரை **மிகவும் நல்லவர்** என்றுதான் புகழ்ந்தார்கள். ஆனால் **சரியான ஆதாரத்துடன்** பிடிபட்டதால் இப்போது அவர் **ஜெயிலில்** செல்லும் நிலை உண்டானது. ஆனால் இவரை வகையாக ஆதாரத்தோடு நீதிமன்றத்தில் நிற்கவைத்த ஒரு நபர் உண்டு. **அவர்தான்** இத்தனை **ஊழலுக்கும் காரணம்.** பிஷப்பை ஊக்குவித்தவரும். பணம் **பிஷப்புக்கு** கைமாற செய்ததும் அவர்தான். ஆனால் கடைசியாக ஒரு வருடத்துக்குமுன் அந்த நபருக்கும் **பிஷப்புக்கும்** சில விஷயத்தில் மனஸ்தாபம் உண்டானது. அது வளர்ந்துகொண்டு பழிவாங்கும் நிலைக்கு அந்த பணக்கார நபர் துணிந்தார். எல்லா ஊழல்களின் **ஆதாரங்களும்** அந்த நபர் **கையில் வைத்திருந்ததால்** பிஷப்பை **பழிவாங்கி விட்டார்.** கர்த்தருடைய பணத்தை திருடிய அந்த இரண்டு **பேர்களுக்கும்** கர்த்தர் குருட்டாட்டம் உண்டாக்கி 24 CSI டையோசிஸ்ஸின் சபைகளுக்கும் **பிஷப்மாருக்கும்** தலைமை **பதவியான மாடரேட்டர்** பதவி வகித்தவருக்கு நேர்ந்த கதி கண்டீர்களா? **அனைத்து பிஷப்மாருக்கும் இது ஒரு எச்சரிப்பாக இருக்கட்டும்.**

### மெட்ராஸ் பிஷப் அவர்களுக்கும் அன்பான எச்சரிப்பின் ஆலோசனை

மெட்ராஸ் பிஷப் Rt. Rev. George Stephen அவர்கள் ஒரு **விளம்பர பிரியர்** என்பது **மெட்ராஸ் டையோசிஸ் மக்களால்** பேசப்படுகிறதாக இருக்கிறது.



எனக்கு வந்த சில கடிதங்களில் ஒரு கடிதத்தின் சுருக்கத்தை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு சிறு கிராம சபை **மக்கள் பிஷப்** அவர்களுக்கு எழுதியதாக கூறப்படும் கடிதத்தின் நகல்.

மேனமைதங்கிய பிஷப் அய்யா சமூகத்துக்கு,

ஐயா, எங்கள் சபைக்கு சபை பிள்ளைகளுக்கு திடப்படுத்துதல் நடத்த தாங்கள் வருவதைகுறித்து எங்களுக்கு பெருமையாக இருக்கிறது. பிஷப் ஐயா அவர்கள் நாங்கள் எழுதுகிறதை தவறாக நினைக்கக்கூடாது. எங்கள் சபை மிகவும் ஏழை சபையாகும் **காணிக்கை வரவு** மிக குறைவு. ஆனால் எங்கள் **ஆயர்** சிலரின் ஆதரவோடு சபைக்கு வரும் **பிஷப்புக்கு** சிறப்பான வரவேற்பு கொடுக்கவேண்டும். **பிஷப்** அவர்களின் **போட்டோவை** மிகப் பெரிய **பிளக்ஸ் போர்டுகளில்** அச்சிட்டு **வழி நெடுக்க** இரண்டு பக்கமும் **வைக்கவேண்டும்.** மெயின் ரோட்டிலிருந்து ஆலயம் வரை **இரண்டு பக்கமும்** வைக்கவேண்டும்.

**வரவேற்பு** அலங்காரம், **பேண்ட் இசை** முழங்க வரவேற்று **ஆள்உயரமாலை தான்** உங்களுக்கு பிடிக்குமாம்

பிஷப் அவர்கள் **சிறு மாலையை** இஷ்டப்படமாட்டார் என்றும் கூறி பிஷப் அவர்களுக்கும் **துணைவியாருக்கும் இரண்டு ஆள் உயர ரோஜா மாலை** வாங்கவும் எங்கள் சபையின் ஞாபகாற்தமாக **பிஷப் அம்மாவுக்கு** தங்க **மோதிரம் பரிசாக** அளிக்க திட்டம் போட்டு அதற்கான செலவு **பல லட்சங்கள்** ஆகும் என்றும் அதற்கு சபை மக்களை **பணம் கொடுக்கும்படி** மிகவும் வற்புறுத்துகிறார். ஆயரின் உதவி சில காரியங்களுக்கு எங்களுக்கு தேவை என்பதற்காக நாங்கள் இஷ்டமில்லாமல் **பணம்** கொடுத்து இருக்கிறோம்.



பிஷப் ஐயா இது **எங்கள் சபையின் பிரச்சனை** மட்டுமல்ல. நம் டையோசிஸ்ஸின் **பல்வேறு இடங்களில்** உள்ள **சபை மக்களின்** பிரச்சனை ஆகும். திருமண்டலம் முழுவதும் **உங்களைப்பற்றியும்** உங்கள் விளம்பர மோகத்தை குறித்தும் பேசுகிறார்கள். நாங்களும் பல பத்திரிகைகளில் உங்கள் புகைப்படங்களை கண்டோம். குறிப்பாக **கிறிஸ்டியன் மெசஞ்ஜர்** என்ற பத்திரிகையிலும் உங்கள் புகைப்படங்கள் யாவும் ஆள்உயர ரோஜா மாலையோடுதான் காணப்படுகிறீர்கள். ஒரு படத்திலாவது **சிறிய மாலையுடன்** உங்கள் வரவேற்பு படத்தை நாங்கள் பார்க்கவில்லை. இதனால் உங்களைப்பற்றி மக்கள் தவறாக பேசுவார்களே. நீங்கள் இதை தவிர்க்கக்கூடாதா?

மேலே வாசித்த நான் கேட்ட **இந்த செய்தியை** வைத்து சென்னையில் சில ஆயர்களிடம் தனித்தனியாக விசாரித்தேன். ஆனால் அந்த ஆயர்கள் எல்லாரும் ஓய்வுபெற்ற ஆயர்கள். **பணியில் உள்ள ஆயர்கள் என்னிடம் பேசவே பயப்படுகிறார்கள்.** ஆகவே அந்த ஓய்வுபெற்ற ஆயர்கள் என்னிடம் கூறியதாவது...

நான் சில வருடத்துக்கு முன் ஊழியம் செய்த எங்கள் சபைக்கு எங்கள் பிஷப் அவர்கள் வருகை தந்தபோது எங்கள் ஆலயத்தின் **தலைமை குருவானவர்** எங்கள் எல்லாரையும் கட்டாயப்படுத்தி பிஷப்பின் வரவேற்பு சிறப்பாக அமைய வேண்டும் என்றும் **தங்க மோதிரம்** வாங்க வேண்டும் என்றெல்லாம் கணக்குபோட்டு பணம் வசூலித்தார். இதுபோல பல CSI சபைகளின் **குருமார்கள்**தான் தங்கள் சுயநலத்துக்காக பிஷப்புக்கு **இப்படிப்பட்ட கெட்ட பெயரை** உண்டாக்குகிறார்கள். மற்றபடி பிஷப் அவர்கள் யாரிடமும் **என்னை இப்படித்தான்** வரவேற்கவேண்டும். **தங்க மோதிரம்** அல்லது **தங்க செயின் பரிசாக கொடுக்கவேண்டும்** என்று கேட்டதாக நாங்கள்யாரும் கேள்விப்பட்டதில்லை.

ஆகவே தவறு **ஆயர்கள் மேல்தான்** உண்டு. தங்களுக்கு **இடம் மாற்றம்** உண்டாகி விடக்கூடாது அல்லது தாங்கள் **பதவிஉயர்வு** பெறவேண்டும் இப்படிப்பட்ட **சுய லாபத்துக்கு** பிஷப்பை **தவறான வழியில் சந்தோஷப்படுத்த** ஏற்பாடு செய்கின்றனர் என்றார்கள்.

**அதே சமயம்** மற்றொரு ஆயர் கூறியதாவது: எங்கள் பிஷப் அவர்களுக்கு விளம்பரம் **மிகவும் பிடிக்கும்.** அவர் ஒரு **விளம்பர பிரியர்** என்பது உண்மைதான். தனக்கு **விளம்பர மோகம்** இல்லையானால் பிஷப் அவர்கள் ஆயர்களிடம் இப்படிப்பட்ட ஆடம்பர வரவேற்பை **தங்க காசு. தங்க**

**மோதிரம் அல்லது செயின்** இவைகளை யாரும் எனக்கு கொடுக்கக்கூடாது என்று கட்டளையிட்டிருக்க முடியாதா அல்லது வெளிப்படையாக அறிக்கை வெளியிடுவதோடு மட்டுமல்லாமல் **வரவேற்பு விஷயத்தில்** தன் **கண்டிப்பை** செயல்படுத்தியிருக்க முடியாதா? எல்லா **ஆயர்களும்** கூடும் கூட்டத்தில் **தன் கண்டிப்பான உத்தரவை** நிறைவேற்றாத ஆயர்கள் **கண்டிக்கப்படுவார்கள்** என்று வெளிப்படையாக கூறியிருந்தால் இப்படிப்பட்ட அவப்பெயர் பிஷப் அவர்களுக்கு உண்டாயிருக்குமா?

**வருமான வரி துறையினர்** பிஷப் வீட்டை பரிசோதித்தால் இவர் பிஷப் பதவி ஏற்ற நாளிலிருந்து ஒவ்வொரு வரவேற்பிலும் **பிஷப் அம்மா பெயரில்** வாங்கிய **தங்க மோதிர** குவியல்கள் எவ்வளவு பிடிபடும் தெரியுமா? பிஷப்புக்கு தனியாக அளித்த **தங்க பரிசு பொருட்கள்** குவிந்திருப்பதை கண்டுபிடித்திருப்பார்கள்.

**ரொக்க பணம்** பெருவதற்கு பதிலாக **பரிசு பொருளாக தங்க மோதிரம், தங்க செயின்கள்** பெறுவதும் ஆயர்கள் சபை மக்களை பிழிந்தெடுத்து இப்படிப்பட்ட பரிசு பொருட்களை தங்கத்தில் பரிசளிப்பதும் அரசியல்வாதிகளின் தந்திரமல்லவா?

தமிழ்நாட்டின் மரித்த முன்னாள் முதல்வர் **விரும்புவதால் அல்லவா**? அத்தனை **மந்திரிமார்களும்** MLA, MPக்கள் யாவரும் **சாஸ்டாங்கமாக காலில் விழுந்தார்கள்.** தங்கள் **பதவி நிலைத்திருக்க எலக்ஷனில் சீட் கிடைக்க** வெட்கம், மானம் இல்லாமல் பொதுமக்கள் பார்க்க முதல்வர் **நடந்துபோகும் தரையை** தொட்டு **வணங்குவது** எத்தனை கேவலம்.

**கேரளாவில்** மலையாள பத்திரிக்கையில் இவர்கள் தான் **தமிழ்நாட்டு மந்திரிகள்** என்று **ஒரு புகைப்படம் வெளியிட்டு** அதில் அனைத்து **மந்திரிகளும்** MLA, MP மார்களும் L வடிவத்தில் உடலை **வளைத்து தலைகவிழ்ந்து கைகூப்பி** நிற்கும் **காட்சிகளை வெளியிட்டு தமிழ்நாட்டை எத்தனை கீழ்தரமாக சித்தரித்தார்கள்.** இவைகளை குறித்து டெல்லியில் பத்திரிக்காரர்கள் வெளிப்படையாகவே முதல்வரிடம் கேள்வி கேட்டார்கள். **மந்திரிகள் காலில் விழும் கலாச்சாரத்தை** பற்றி கேட்டபோது முதல்வர் ஒரு புன்சிரிப்போடு **அது அவர்களின் ஆர்வகோளாறு** என்றும் அவர்கள் **என்மேல் வைத்த தாயன்பு** என்றார்.

என்றாலும் முதல்வர் விமானத்தில் பறக்க விமானம்மேல் எழும்பிய பின்னும் **வானத்தை நோக்கி** மந்திரிகள் விமானம் கண்ணிலிருந்து மறையும் வரை கைகூப்பி நிற்கும் **காட்சியை** என்ன என்பது? இப்படி பத்திரிகைக்காரர்கள் கேலியாக எழுதினார்கள். முதல்வர் இப்படி யாரும் காலில் விழக்கூடாது என்று கண்டிப்பான **கட்டளையிட்டால்** அதை மீறி **அவர்கள் காலில் விழுவார்களா?** நிச்சயம் கீழ்படிவார்களே! ஏன் அப்படி கண்டிக்கவில்லை - அவர் அதை விரும்பினார் !


அதைப்போலத்தான் **மெட்ராஸ் டையோசிஸ்** CSI பிஷப் **அவர்களும்** தன்மேல் எழுந்துள்ள **விளம்பர பிரியர்** என்ற அவப்பெயரை மாற்ற ஆயர்களிடம் **கடுமையாக கட்டளையிடவேண்டும்.** அது அவருக்கும் அவர் பதவிக்கும் நல்லது. தங்க பரிசுகளின் கணக்கு ஒரு நாள் வருமான வரி துறையிடம் அகப்படும்போது ஆந்திர பிஷப்பின் **முன்னாள் மாடரேட்டரின்** நிலை எந்த பிஷப்புக்கும் உண்டாகக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில்தான் இதை இங்கு குறிப்பிட்டேன். ஆலோசனைகளை ஏற்றுக்கொள்வதும் ஏற்றுக்கொள்ளாததும் அவர் பிரியம். ஆயர்களாவது பிஷப் அவர்களின் நல்ல பெயரை இப்படிப்பட்ட காக்கா பிடிக்கும் தந்திரமான தங்க மோதிர அன்பளிப்பு என்ற பெயரில் கொடுப்பதும் ஆள் உயர ரோஜாப்பூ மாலை, கட்டவுட் விளம்பரங்களை சபை மக்கள் பெயரில் வைத்து பிஷப் அவர்களுக்கு கெட்ட பெயரை உண்டாக்கவேண்டாம்.

கர்த்தருக்கு கொடுக்கவேண்டிய மரியாதையை மனிதருக்கு கொடுக்கக்கூடாது. அது அவர்களுக்குத்தான் கண்ணீரை வரவழைக்கும்.

ஊதவேண்டிய சங்கை ஊதி அறிவித்துவிட்டேன். அவ்வளவே!

# உலகில் சுவிசேஷம் அறிவிக்கப்படாத ஒரே தீவு

## அந்தமான் ஜாரவாஸ் - சென்டினல் தீவி ஆதிவாசிகள்



பல வருடமாகவே **அந்தமான்** ஆதிவாசிகள் மத்தியில் பலர் ஊழியம் செய்தனர். நானும் சுமார் 40 ஆண்டுகளுக்குமுன் **அந்தமான்** தீவுக்கு சென்று ஊழியம் செய்துவந்தேன்.

**ஜாரவாஸ், சென்டினல்** என்ற **ஆதிவாசிகள்** அந்தமான் தீவுகளில் இதுவரை சுவிசேஷம் அறிவிக்கப்படாத **ஒரே தீவுதான் வடக்கு சென்டினல் தீவு** என்பதாகும். அந்தமான் தீவு கூட்டங்களில் உள்ள ஆதிவாசிகள் யாரோடும் பழகாது விலகியிருக்கும் ஒரே தீவு **வடக்கு சென்டினல் தீவு** என்பதாகும்.

இங்கு **ஜரவாஸ் சென்டினல்** ஆகிய இரண்டுவித **ஆதிவாசி இனங்களும்** மத்தியில் பல வருடங்களாக சுவிசேஷம் அறிவிக்க பல குழுக்கள் முயன்றனர். எல்லாரும் அவர்கள் வாழும் அந்த ஒரு தீவில் மட்டும் கால் வைக்கவே பயப்படுகின்றனர். அவர்கள் **விஷ** அம்புகளும், **விஷம்** தோய்த்த ஈட்டிகளும் வைத்துள்ளனர். வேற்று மனிதர் யாரோடும் பேசவோ பழகவோ விரும்புவதில்லை.

நான் அந்தமான் தீவுகளுக்கு போனபோது ஜாரவாஸ் ஆதிவாசிகளை பார்க்க ஆசைப்பட்டேன் மூன்றுமுறை அந்தமான் தீவுக்கு சென்றுள்ளேன். ஒருமுறை மட்டும் இந்திய ராணுவ கப்பல் கேப்டன் ஒருவர் எனக்கு உதவினார். நான் அவரோடு குறிப்பிட்ட அந்த தீவை சுற்றிவந்தேன். நாங்கள் கப்பலிருந்து இறங்கி சிறிய விசை படகில் ஏறி அந்த தீவுக்கு சற்று அருகே சென்றோம். உடனே காட்டுக்குள்ளிலிருந்து ஒரு கூட்டம் வெளியே வந்தது. **ஜாரவாஸ்** ஆதிவாசிகளின் உள்ள ஆணும், பெண்ணுமாக பலர் வில் அம்புகளோடு கரையில் நின்றவாறே எங்களை பார்த்து அம்புகளை எரிந்தனர். ராணுவ வீரர்கள் அம்பு விழாத தூரத்தில் எங்கள் படகை நிறுத்தினார். அத்தனை ஆதிவாசிகள் உடலிலும் ஒரு துண்டு துணியும் இல்லை. ஆண்களும் - பெண்களும் அப்படியே நிர்வாணமாக நின்றனர்.

அவர்கள் கடலில் இறங்கிவந்தும் நம்மை துரத்தி தாக்குவார்கள் என்றார்கள். ஆகவே நாங்கள் புறப்பட்டோம்.

**பிரதமர் இந்திராகாந்தி** அவர்கள் காலத்தில் இவர்களை இந்திராகாந்தி அவர்கள் கப்பலில் சென்று நேரில் கண்டபின் அந்த **கலாச்சாரத்தில்** வாழும் மக்களை யாரும் தொல்லைபடுத்தவேண்டாம். அவர்களை அப்படியே விட்டுவிடுங்கள் என்றார். குறிப்பாக மிஷனரிகள் யாரையும் அங்கு போகாதவண்ணம் இந்திய அரசாங்கத்தால் தடை சட்டமும் இயற்றப்பட்டது.



பார்லிமெண்டில் **மனிதநேய** கமிட்டியினர் உலகத்தில் **இருண்ட கண்டம்** என்று அழைக்கப்படும் **ஆப்பிரிக்கா** காடுகள், மனிதர்களை பிடித்து சாப்பிடும் **நியூகினி - பாப்புவா** தீவுகளில் உள்ள யாவரும் நாகரீகம் அடைந்து உடைகள் உடுத்திக்கொண்டனர். மிஷனரிகள் அங்கு சென்றதால் **நிர்வாணிகளாக** இருந்த வாழ்க்கையிலிருந்து அவர்கள் மாறி உடைகளை உடுத்தி நாகரீகம் உள்ளவர்களாக மாறி விட்டனர். அரசாங்க நன்மைகளை அவர்களும் பெற்று கல்வி பயின்று அந்த நாடும் தீவுகளில் வாழும் மக்களும் முன்னேறி இருக்கும்போது நம் இந்தியாவின் ஒரு பாகமான அந்தமான் தீவுகளில் உள்ள குறிப்பிட்ட **வடக்கு சென்டினல் தீவு** மக்கள் மட்டும் ஏன் **நாகரீகமற்று நிர்வாணமாக** இருக்கவேண்டும்.

நமக்கு கிடைக்கும் **ஆகாரம், ரேஷன், கல்வி** யாவும் அவர்களும் பெற உரிமை உண்டே அதற்கான வழி உண்டாக்க முயல வேண்டும் என்றனர். ஆனால் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் பிடிவாதமாக அவர்கள் அப்படி வாழத்தான் ஆசைப்படுகிறார்கள் என்றால் அவர்கள் சுதந்திரத்தில் நாம் தலையிட வேண்டாம் என்று கூறி அந்த விஷயத்துக்கு முற்றுபுள்ளி வைத்துவிட்டார்.

அந்த தீவுக்கு போக முயலுபவர்கள் **கைது செய்யப்பட்டனர்.** ஒரு சில ஆத்தும பாரமுள்ள விசுவாசிகள் பல நாட்கள் ஜெபித்து அங்கு சென்று **இரத்த சாட்சிகளாய்** மரிக்க ஆயத்தமாகி சென்றவர்கள். அந்த தீவின் கரையை கடந்து உள்ளே செல்லும் முன் அம்புகளால் காயப்பட்டு உயிர் பிழைத்து திரும்பினர். இதை அறிந்த கடல் காவல் படை அவர்களை கைது செய்து ஜெயிலில் அடைத்தது.

ஆண்கள் சென்றால்தான் பிரச்சனை, ஒருவேளை **பெண் மிஷனரிகள்** போனால் இரக்கம் காண்பிப்பார்கள் என்று கருதி இரண்டு பெண்கள் மரணத்தை எதிர்கொள்ளும தீர்மானத்தோடு சென்றனர். உள்ளே சென்றுவிட்டபின் அவர்களிடமிருந்து தகவல் இல்லை. இருவரில் ஒரு பெண் மட்டும் தன் ஆடைகள் கிழிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் காட்டில் அலைந்து கடல் கரையில் விழுந்துகிடந்தாள். கடல் கரை காவல் ராணுவம் சென்று அவளை மீட்டனர் சரீரம் முழுவதும் காயங்களோடு இருந்த அவளை காப்பாற்றி ஆஸ்பத்திரியில் 3 மாதங்கள் சிகிச்சை பெற்று அவளும் சிறையில் அடைக்கப்பட்டாள். மற்ற பெண்ணை ஆசிவாசிகள் துரத்திக்கொண்டு போனதை தான் கண்டதாகவும் தான்மட்டும் அந்த இருட்டு வனத்தில் மரத்தில் ஏறி பல வாரங்கள் இறங்காமல், தண்ணீர் குடிக்காமல் பயந்து பின் கடல் கரையை கண்டுபிடித்து வந்து மயங்கி விழுந்ததாகவும் கூறினாள். அநேக நாட்களுக்கு பிறகு அந்த சகோதரியும் அம்பில் உள்ள விஷத்தால் காயம் குணமாகாமல் மரித்து போனாள் என்று கேள்விப்பட்டோம்.

2017ல் மட்டும் அந்தமானுக்கு வந்து சென்ற **சுற்றுலா பயணிகளின்** எண்ணிக்கை 4.8 லட்சம் என்று ஒரு குறிப்பு கூறுகிறது. இப்படி ஒவ்வொரு வருடம் சுற்றுலா பயணிகள் லட்ச கணக்கில் வந்துபோகிறார்கள். ஆனால் அந்த குறிப்பிட்ட தீவை மட்டும் யாரும் அணுக முடியவில்லை.

சமீபத்தில் 3 மாதங்களுக்குமுன் அமெரிக்காவிலிருந்து ஒரு மிஷனரி சுற்றுலா பயணிபோல் வந்து இந்த குறிப்பிட்ட தீவுக்கு இயேசுவை அறிவிக்கவும், அவர்களை இயேசுவின் பிள்ளைகளாக மாற்றவும் துணிந்து காட்டுக்குள் போனார். அவர் பெயர் **ஜான் ஆலன்.** அவர் வயது 27. ஆனால் ஜாரவாஸ் ஆதிவாசிகளின் அம்புக்கு பலியானார்.

இந்த வாலிபர் ஜான் ஆலன் அமெரிக்காவில் ஜெபக்குழுவில் அந்தமான் ஆதிவாசிகளுக்காக மற்றவர்களோடு ஜெபித்து வந்தார். ஒரு நாள் டாக்டர் டேவிட் லிவ்விங்ஸ்டனை போல சுவிசேஷம் அறிவித்து மரிப்பேன் என்ற தைரியத்தோடு தனியாக சுற்றுலா பயணிகளைபோல வந்து சில நாள் தீவிலுள்ள ஓட்டலில் தங்கி விவரங்களை சேகரித்தார். ஒரு சிறு விசை படகு ஆளுக்கு கொஞ்ஜம் பணம் கொடுத்து அந்த தீவில் இறக்கிவிட கேட்டுக்கொண்டார். கையில் வாழைப்பழ குழைகளை சுமந்தபடி தீவில் இறங்கினார். உடனே ஏராளமான ஆதிவாசிகள் அவனை சுற்றி பழங்களை மட்டும் பறித்து தின்று இவரை தாக்க தொடங்கினார்கள். எப்படியோ ஓடிவந்து கடலில் குதித்து சிறு காயங்களோடு தப்பினார். மறுவருடம் அதுபோல திரும்பி அந்த தீவுக்கு செல்ல முயன்றார். இப்படி 5 முறை தீவில் இறங்கி தப்பினார். கடைசி முறையாக கடந்த வருடம் ஜெபத்தோடு அந்த தீவில் இறங்கி இந்த இருண்ட காட்டுக்குள் பிரவேசித்தார். ஆனால் பிணமாக கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்டு அவர் உடலை கடற்கரை காவலர்களாலும் கைபற்ற முடியாமல் உடல் அந்த தீவில் அப்படி பல வாரங்கள் கிடந்தது. அதன் உலகமெங்கும் இந்த விவரம் பரவ இப்போது பல ஜெப குழுக்கள் அரசாங்க பாதுகாப்போடு காட்டுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இதுவரை உத்தரவு கிடைக்கவில்லை. அமெரிக்க ஜனாதிபதி அந்த வாலிபனின் இரத்தசாட்சி மரணத்துக்கு இறங்கல் தெரிவித்து இராணுவ பாதுகாப்போடு அந்த ஆதிவாசிகளை சந்திக்க முயல ஏற்பாடு செய்யப் போவதாக செய்திகள் கூறுகிறது.

இந்த செய்தியினால் இப்போது உலகமே உற்றுபார்க்கும் இடமாக அந்தமான் மாறிவிட்டது. இந்த கூட்டத்தினருக்கு **இயேசுவை அறிவிக்கும் வரை** உலகத்தை கர்த்தர் முடிக்கமுடியாது. உலக முடிவும் வராது. அதற்காக உலகில் பலர் ஜெபித்து பலவித புது கருவிகளை உபயோகித்து அவர்களைக் கொல்லாமல் பயப்படுத்தி அவர்களிடம் பழகி இயேசுவை எப்படியாவது அறிவித்துவிட வேண்டும். என பல நாடுகளில் உள்ள சபைகள் - விசுவாசிகள் ஜெபித்து அவர்களை சந்திக்க பெரிய திட்டங்கள் வகுத்துக்கொண்டிருப்பதாக கேள்விப்பட்டு தெய்வத்தை துதிக்கிறோம்.

இயேசு அவர்களுக்காகவும் இரத்தம் சிந்தினாரே! அவர்களுக்கு இயேசுவின் அன்பை அறிவிக்காமல் போனால் குற்றம் உலகத்திலுள்ள அனைத்து கிறிஸ்தவர்கள் மேலும் குறிப்பாக **இந்திய கிறிஸ்தவர்கள்மேலும் சுமரும். முதலாவது அந்த தீவுக்கு போகக்கூடாது** என்ற தடை சட்டத்தை இந்திய அரசாங்கம் நீக்க வேண்டும். ராணுவ பாதுகாப்போடு அவர்களை சந்திக்க திட்டமிடவேண்டும். இத்தனைக்கும் இந்த பழங்குடியினர் மொத்தம் 150 குடும்பங்கள் மட்டுமே அந்த தீவில் வாழ்கிறவர்கள் என்று அரசாங்க புள்ளிவிவரம் அறிவிக்கிறது. நிச்சயம் கர்த்தர் அவர்களை சந்திக்க ஏதாவது வழி உண்டாக்குவார்! ஜெபிப்போம் !

# காயத்திரி வேதம் சொல்லும் மெய்ப்பொருள் யார்?

குறிப்பு : வாசகர்கள் கீழ்காணும் விஷயத்தை கடைபிடிக்க இதை நான் வெளியிடவில்லை. நீங்கள் இதையும் அறிந்துகொண்டிருப்பது நல்லது என்பதற்காக வெளியிட்டேன்.

SELECTED - ஜாமக்காரன்

இந்து வேதங்களில் **காயத்திரி மந்திரம்** சொல்லும்போது சொல்ல வேண்டிய மந்திரங்கள் **ஏழு என்றும்,** அவற்றோடு **"ஓம்"** என்று சேர்த்து சொல்லப்பட வேண்டும் என்கிறது. அவைகள் எல்லாம் வடமொழியில் எழுதப்பட்டுள்ளன. அதை தமிழில் உச்சரிக்கும்போது கடினமாக இருக்கும். ஆகையால் ஆங்கில சொற்படி பார்ப்போம். அந்த மந்திரங்கள் ஏழும் என்ன என்று முதலில் பார்ப்போம்.

ஓம் BHUH

ஓம் BUVAHA

ஓம் SUVAHA

ஓம் MAHAHA

ஓம் JANAHA

ஓம் THPAHA

ஓம் SATYAM

1) முதலாவதாக கூறப்படும் **ஓம்** என்ற மந்திரம் Pranava என்பதாகும். அது **நிகரற்ற ஒரு சக்தியை** குறிக்கிறது. அது **உலகப் படைப்பிற்கு** காரணமாக **சக்தி** என்றும் சொல்லப்பட்டுள்ளது. Bhuh என்ற சொல் Bhavati - ITI -Bhuhu என்னும் அந்த வார்த்தைக்கு **அப்படியே ஆயிற்று** என்று பொருள் என்றும் காண்கிறோம். கிறிஸ்தவ திருமறையில் **ஆமென்** என்ற சொல் அதுபோன்ற பொருளுடையதாக இருக்கிறது. **ஓம்** என்பது உலகத் தோற்றத்திற்கு காரணமான Pranava மந்திரம் என்றும் அதுவே உலகத் தோற்றவுமாயிற்று என்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. **ஓம் என்பதே உலகமாயிற்று** என்கிறது. திருமறையில் **ஆதியிலே வார்த்தை தேவனிடத்திலிருந்து** வந்த அந்த வார்த்தை **தேவனாயிருந்தது.** (யோவான் 1:1) என்று எழுதியிருக்கிறது.

**அந்த வார்த்தை** மாம்சமாகி **கிருபையினாலும்** சத்தியத்தினாலும் நிறைந்தவராய் **நமக்குள்ளே வாசம் பண்ணினார்.** யோவான் 1:14 என்று கிறிஸ்தவ வேதம் கூறுகின்றது.

அவர் உலகத்தில் இருந்தார். உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. யோவான் (1:10) என்று கிறிஸ்துவ வேதம் கூறுகின்றது.

**இந்து வேதங்கள்** கூறும் தெய்வம் **இயேசுவே** என்பதை காண்போம்.

உலகத் தோற்றத்திற்கு காரணமாக இருந்தது **ஒரு வார்த்தை** அது ஓம் என்ற சொல் **எபிரேய மொழிச்** சொல்லாகும். வடமொழியான **சமஸ்கிருதம் கிரேக்க லத்தீன்** மொழிகளின் **கலப்பு** என்று **மொழி ஆய்வாளர்கள்** சொல்லுகிறார்கள். இது பற்றிய விபரம் பிற்பகுதியில் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது.

2) இரண்டாவது மந்திரம் **ஓம் Bhuvaha** என்பதாகும்.

Bhuvaha என்றால் தெய்வம். இந்த உலகத்தை **படிப்படியாக தோற்றுவித்தார்** என்று பொருளாம். இதை தெய்வம் தன் சித்தத்தின்படி **செய்து முடித்தார்** என்றும் நம் வேதத்தில்

காண்கிறோம்.(Bhavathi ITI Bhuhu) கிறிஸ்தவ திருமறையில் **ஆதியாகமம்** என்ற புத்தகத்தில் தேவன் எவ்விதம் **உலகத்தையும்,** உலகத்தில் **உள்ளவர்களையும்** தோற்றுவித்தார் என்பதையும் அவைகளை தோற்றுவிக்க **7 நாட்கள்** ஆனது என்றும் காண்கிறோம். மற்றும் தேவனுக்கு **ஒருநாள்** என்பது **1000 வருடங்கள்** என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் தன் ஞானத்தின்படியும், சித்தத்தின்படியும் இந்த உலகை படிப்படியாக ஒவ்வொன்றாக தோற்றுவித்தார். அதுவே இந்த மறைகளில் Bhuvaha என்று எழுதப்பட்டுள்ளது.

3) **மூன்றாவதாக** ஓம் Suvaha என்பதாகும். இதை சமஸ்கிருதத்தில் Shustha Varaneeyam என்று கூறப்பட்டுள்ளது. இதை ஆங்கிலத்தில் The work suvaha means Well Choosen **திருமறையில் இயேசுவே தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மனுஷகுமாரனாக** இந்த உலகத்தில் **அவதரித்தார்** என்று காண்கிறோம். இயேசு யோவானால் ஞானஸ்நானம் பெற்றபோது அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே **வானம் திறக்கப்பட்டதையும்** ஆவியானவர் **புறாவைப்போல்** தம் மேல் இறங்குகிறதையும் கண்டார்.

**"அன்றியும் நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று"** மாற்கு 1:10-11 என்று திருமறையில் காண்கிறோம்.

இந்த உலகத்தை இரட்சிக்க மனிதர்களை சாபத்திலிருந்து விடுவிக்க தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டார். இந்த உலகத்தில் மனிதனாய் அவதரித்த **கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவரே தெரிந்துகொள்ளப்பட்டவர்.** அவரே Suvaha என்றும் அறியலாம். **ஓம்** வார்த்தையால் ஓம் Suvaha என்ற வார்த்தை உலகத் தோற்றத்திற்கு காரணமாகயிருந்த உலகில் அவதரித்த **இயேசுவே** அவர் என்றால் மிகையல்ல.

**4) நான்காவது** ஓம் Mahaha என்பதாகும். இதற்கு **தேவன் துதிக்கப்படத்தக்கவர்** என்று பொருளாம். --Means worship Brahman is worshipable என்று சொல்லப்பட்டிருக்கிறது. **தேவன் துதிக்கத்தக்கவர்.** திருமறையில் **தேவனைத் துதிப்பதற்கு** தனி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேதத்தில் முதல் அத்தியாயத்திலிருந்து கடைசி அத்தியாயம் வரை **துதித்தல்** பற்றி நிறைய விவரங்கள் எழுதப்பட்டிருக்கிறது. எரேமியா திர்க்கதரிசி புத்தகத்தில் **துதிக்க செய்கிறவர்** என்று **எழுதப்பட்டுள்ளது. பூலோகத்தில் மட்டுமல்ல வான மண்டலத்திலும் தேவனைத் துதித்துக்கொண்ருப்பார்கள்** என்று திருமறையில் காண்கிறோம். **இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாய் இருக்கிற தேவரீரே பரிசுத்தர்** (சங்கீதம் 22:3) **துதி செய்வது செம்மையானவர்களுக்கு தகும்** (சங்கீதம் 3:1) **அல்லேலூயா**! வானங்களில் உள்ளவைகளே **கர்த்தரை துதியுங்கள் உன்னதங்களில் உள்ளவைகளே அவரை துதியுங்கள்** (சங்கீதம் 148:1) பூமியில் உள்ளவைகளே **கர்த்தரை துதியுங்கள்** (சங்கீதம் 148:7) மேலும் நமது தேனுடைய ஊழியக்காரரே அவருக்கு பயப்படுகிற **சிறியோரும் பெரியோருமானவர்களே** நீங்கள் யாவரும் **அவரை துதியுங்கள்** என்று ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து பிறந்தது. (வெளி 19:5) என்று வேதத்தில் கடைசி புத்தகத்தில் வாசிக்கிறோம்.

எனது **தேவனை துதித்து** வழிபட வேண்டும் என்றும் அவரே **துதித்து வழிப்பட** தக்கவர் என்றும் திருமறை நமக்கு சொல்வதை காண்கிறோம்.

**5) ஐந்தாவதாக** ஓம் Janaha இது தேவன் **வல்லமையுள்ளவர் வல்லமையை தருகிறவர்** என்று பொருள். **வல்லமை** அவரிடமிருந்து **வெளிப்படுகிறது** என்பதை குறிப்பாக எழுதப்பட்டு உள்ளது.

Brahman is difined here with Generating Power என்று Janaha என்பதற்கு பொருள் கொடுக்கிறார்கள். திருமறை முழுவதும் **தேவன் வல்லமை உள்ளவர்** என்றும் நமக்கு **வல்லமை தருகிறவர்** என்றும் சொல்லுகிறதை பார்க்கிறோம். அவைகளில் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

"கர்த்தாவே மாட்சிமையும் வல்லமையும். மகிமையும், ஜெயமும், மகத்துவமும் உம்முடையவைகள். (1 நாளா 29:11)" "உம்முடைய கரத்திலே **சத்துவமும் வல்லமையும்** உண்டு(1 நாளா 29:12)"

"தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடு இருக்கிறவர்களுக்கு **தம்முடைய வல்லமையை** விளங்கப்பண்ணும்படி கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலவிக்கொண்டிருக்கிறது"

"அல்லேலூயா இரட்சன்யமும் மகிமையும், **கனமும் வல்லமையும்** நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது (வெளி. 19:1)"

**வல்லமைமிக்க** தேவன் நமக்கு **வல்லமை தருகிறவராய்** இருக்கிறார் என்று திருமறையில் காண்கிறோம்.

**6) ஆறாவதாக** ஓம் Thapaha-Thapaha means Penance ஆங்கிலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தைகளை ஆங்கில அகராதியில் Penitent என்பதற்கு Showing wrong என்று பொருள் சொல்லப்பட்டிருக்கிறது. வட மொழி வல்லுனர்கள் இதை சரியான கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை. **திருமறை** கொண்டு **இதன் பொருள்** கண்டால் மட்டுமே இப்படி சொல்ல முடியும் திருமறையில் ஆதியாகமத்தில் தேவன் உலகத்தை படைக்கும்போது **இயற்கையையும்** வானத்தின் **சர்வ சேனையையும்** படைத்தபோது தேவன் அது **நல்லது என்று கண்டார்** என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் பின்பு ஆதியாகமம் 6ம் அதிகாரத்தில் **மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகிற்று** என்றும் **அவன் இருதயத்தில் நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே** என்றும் கர்த்தர் கண்டு தன் பூமியிலே **மனுஷனை உண்டாக்கியதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். அது அவர் இருதயத்திற்கு விசனமாய் இருந்தது.** (ஆதி 6:5,6) என்றும் காண்கிறோம். மேலே குறிப்பிட்ட சமஸ்கிருத வார்த்தைகள் எல்லாம் **திருமறை கருத்தோடு மட்டுமே ஒத்துப்போகிறது** என்பதை கவணிக்கவேண்டும்.

**7) ஏழாவதாக** ஓம் Satyam **சத்தியம்** என்ற சொல்லின் பொருள் என்ன என்பதை நாம் அறிவோம். **கடவுள் சத்தியமாக இருக்கிறார்** என்று இந்த வேதத்தில் **ஓம் சத்தியா** என்று தியானிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை திருமறைகொண்டு பார்ப்போம்.

திருமறையில் **தேவன் சத்தியவான்** என்று சொல்லப்பட்டிருக்கிறது. **அவர் சத்தியமானவர்** அவருடைய வார்த்தைகள் **அவரால் கொடுக்கப்பட்ட வேதம் சத்தியம்** என்றும் காண்கிறோம்.

**சத்தியபரனாகிய கர்த்தாவே நீர் என்னை மீட்டுக்கொண்டீர்.** (சங்கீதம் 31:5) ரோமர் 3:4ல் தேவனே **சத்தியபரன்** என்றும் **எந்த மனுஷனும் பொய்யன்** என்றும் சொல்லுவோமாக என்று எழுதப்பட்டுள்ளது.

அவரால் கொடுக்கப்பட்ட வேதம் **சத்தியமும் வல்லமையும்** உடையதாக இருக்கிறது. **உம்முடைய வேதம் சத்தியம்** (சங்கீதம் 119:142) இந்த எழுத்துக்களை சொல்லி தேவனை **துதிக்கும்போது** ஓம் என்ற சொல்லை ஒவ்வொரு வார்த்தைக்கும் முன்வைத்து **துதிக்கவேண்டும்** என்று **காயத்திரி ஜெபத்தில்** காண்கிறோம். இந்த எழுத்துக்கள் எந்த தெய்வத்தை குறிக்கிறது என்று வாசிக்கிற நீங்கள் உணரமுடிகிறது என்று அறிகிறேன்.

**(டாக்டர் ஆல்பட் ஸ்டீபன்,** M.A., M.A., Th. D.B.C.D.J.M.C., Ph. D.,)

# புதிய ஏற்பாட்டில் இயங்கின வீட்டு சபைகள்

நம்மில் அநேகர் சபையை ஒரு கட்டிடத்தோடு தொடர்புப்படுத்தி. தங்கள் விசுவாசத்தைக் காண்பிக்கிறார்கள். அங்கே தேவனை ஆராதிக்கவும் சபை அங்கத்தினர்களை சந்திக்கவும் செய்கிறார்கள். ஆனால் முதல் நூற்றாண்டில் அதிகமான சபை கட்டிடங்கள் கட்டப்படவில்லை. அப்படியானால் சபைக் கட்டிடங்கள் இல்லாத அந்த நாட்களில் ஆதிக் கிறிஸ்தவர்கள் எங்கே கூடினார்கள் ?

அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து. **வீடுகள்தோறும்** அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடு ஆராதித்தார்கள்... (அப். 2:46) அப்போஸ்தல நடபடிக்கைகள் இரண்டாம் அதிகாரத்தில் **இயேசுவை விசுவாசித்தவர்கள்** அல்லது பெந்தேகோஸ்தே நாளன்று 50 நாளை **பெந்தேகோஸ்தே நாள்** என்று அழைப்பார்கள். பெந்தேகோஸ்தே சபை என்று ஒரு சபையம் வேதத்தில் அழைக்கப்படவில்லை. பேதுருவின் செய்தியினால் மனம் **மாறியவர்களின்** வாழ்க்கை முறையை விளக்குகிறது. மேற்கண்ட வசனம் ஆதிக்கிறிஸ்தவர்கள் **"வீடுகள் தோறும் அப்பமிட்டு மகிழ்ச்சியோடு..."** தங்கள் விசுவாசத்தை வளர்த்துக்கொண்டார்கள என்று கூறுகிறது. **புதிய ஏற்பாட்டில்** வீட்டு **சபைகளைக்குறித்து** பல இடங்களில் காணலாம். இவைகள் குடும்பங்களாக கூடிவந்த விசுவாசிகளின் வீட்டு சபைகள் ஆகும். அந்த சபைகளில் இயேசுவின் போதனைகளை தியானித்து, ஒருவருக்கொருவர் ஜெபித்து கிறிஸ்துவ அன்பிலே **விசுவாசத்தில் வளர்ந்தார்கள்.**

**மரியாள் வீட்டு சபை**

அவன் இப்படி நிச்சயித்துக்கொண்டு **மார்க்** என்னும் பெயர்கொண்ட யோவானுடைய தாயாகிய **மரியாள் வீட்டுக்கு வந்தான்.** அங்கே **அநேகர்கூடி** ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அப். 12:12

யூதேயாவை அரசாண்ட ஏரோது அகிரியப்பா ராஜா கிறிஸ்தவர்களை மிகவும் கொடுமைப்படுத்தினான். யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபை பட்டயத்தினாலே கொலை செய்தான். அது யூதர்க்கு பிரியமாயிருக்கிதென்று அவன் கண்டு பேதுருவையும் பிடித்து சிறைச்சாலையிலே வைத்தான். **சபையார் அவனுக்காக (பேதுருவுக்காக) தேவனை நோக்கி** ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள். கர்த்தருடைய தூதன் (பேதுருவை) அவனை சிறையிலிருந்து விடுவித்தான். விடுதலைபெற்ற அப்போஸ்தலன் மரியாளுடைய வீட்டிற்கு போய் அங்கு **ஜெபித்துக்கொண்டிருந்த** கிறிஸ்தவர்களுக்கு, நடந்த காரியங்களை விவரித்து கூறி **மற்றவர்களுக்கும் இந்த அதிசயத்தை** சொல்லுங்கள் என்று பேதுரு அவர்களிடம் கூறினார்.

புதிய ஏற்பாட்டில் **மரியாள்** என்ற பெயரைஉடைய **ஐந்து ஸ்திரீகள்** உள்ளனர். இந்த இடத்தில் குறிப்பிட்டுள்ள **மரியாள்** ஒரு **விதவை.** எருசலேமில் வாழ்ந்தவள். **இவளுக்கு சொந்தமான ஒரு வீடு** மற்றும் ஒரு வேலைக்காரனாவது இருந்திருக்கக்கூடும். எனவே **இவள் வசதி படைத்தவளாகவும்** இருந்திருக்க வேண்டும். இந்த மரியாளுக்கு ஜான் மாற்கு என்ற மகன் இருந்தான். பின்னாளில் இவன் பவுல் பர்னபாவேடுகூட அவர்களுடைய முதல் அருட்பணி பயணத்தில் பங்கு பெற்றான். இந்த **ஜான் மாற்கு** தான் மாற்கு **சுவிசேஷத்தை** எழுதினான் என்று பாரம்பரியம் கூறுகிறது.

## லீதியா வீட்டு சபை

அந்தபடி அவர்கள் (பவுலும் - சீலாவும்) சிறைசாலையிலிருந்து புறப்பட்டு லீதியாலிடத்திறகு போய், சகோதரனை கண்டு, அவர்களுக்கு ஆறுதல்சொல்லி போய்விட்டார்கள். (அப் 16:40)

பிலிப்பி பட்டணத்தில் இரத்தாம்பரம் விற்க்கிற **லீதியாள்** என்பவள் பவுல் இரண்டாம் அருட்பணி பயனத்தில் சுவிஷேசத்தை அறிவிக்க ஐரோப்பாவிற்கு போகும்போது லீதியாள் பவுலை சந்தித்தாள். அங்கு சில நாட்கள் தங்கியிருந்த பின்பு பவுலும் சீலாவும் ஜெபிப்பதற்கு ஆற்றங்கரை ஓரமாக ஒரு இடத்தை கண்டார்கள். அங்கே **ஒரு சில ஸ்திரீகளைக்கண்டு** அவர்களிடம் இயேசுவைப்பற்றி பேசினார்கள். பவுல் பேசுகிற வார்த்தைகளை **லீதியாள்** விசுவாசித்து அவளும் அவளுடைய வீட்டார் அனைவரும் **ஞானஸ்நானம்** பெற்றுக் கொண்டார்கள். பவுலும் சீலாவும் அவளுடைய (லீதியாலின்) வீட்டில் தங்கும்படி அவள் கேட்டுக்கொண்டாள். **பிலிப்பு** என்பவன் அதே பட்டணத்தில் ஊழியம் செய்து கொண்டிருக்கும் போதுதான் அவர்கள் இருவரும் பட்டணத்தில் கலகம் செய்தார்கள் என்று அவர்கள் மீது பொய்யாய் குற்றம் சுமத்தி அவர்களை சிறையில் அடைத்தார்கள்.

சிறையில் அவர்கள் இருவரும் தேவனை துதித்து ஜெபித்துக்கொண்டிருக்கும்போது பூமி அதிர்ச்சி உண்டாகி ஆச்சரிய விதமாக சிறை கதவு தானாக திறக்கப்பட்டு இவர்களை கட்டியிருந்த **சங்கிலிகள்** தெரிக்கப்பட்டன. ஆனால் அவர்கள் சிறையைவிட்டு தப்பி ஓடவில்லை. இப்படிப்பட்ட அந்த சீஷர்களின் சாட்சியினால் **சிறை சாலை அதிகாரியும்** அவன் **வீட்டார் அனைவரும்** இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள்.

பவுலும் சீலாவும் ரோம பிரஜைகள் என்று அறிந்த பட்டணத்து அதிகாரி அவர்களை பட்டணத்தை விட்டு போய்விடும்படி கேட்டுக்கொண்டான். இதனால் **லீதியாவின்** வீட்டில் தங்கி அங்கு கூடிவரும் **கிறிஸ்தவர்களை வசனத்தில் பெலப்படுத்தி** அதன் பிறகு தெசலோனிக்கேயாவுக்கு போய்விட்டார்கள்.

## ஆக்கில்லா பிரிஸ்கில்லா வீட்டு சபை

கிறிஸ்து இயேசுவுக்குள் என்னுடன் வேளையாட்களாகிய **பிரிஸ்கில்லாலையும் அவள் கணவன் ஆக்கிலாவையும்** வாழ்த்துங்கள். அவர்களுடைய வீட்டிலே கூடி வருகிற சபையையும் வாழ்த்துங்கள் என்று பவுல் கடிதத்தில் குறிப்பிடுகிறார். (ரோமர் 16:3,5)

பவுல் இரண்டாம் அருட்பணி பயணத்தில் **கொரிந்து பட்டணத்திற்கு** வந்தபோது **பிரிஸ்கில்லாவும் அவள் கணவன் ஆக்கில்லாவும்** முதன்முதலில் அவரை சந்தித்தார்கள். (அப் 18:12) இவர்கள் **கூடாரம்** கட்டும் தொழில் செய்பவர்களாயிருந்தார்கள். **பவுலும் அதே தொழில்** செய்பவனாகையால் அவரை தங்களுடைய வீட்டில் தங்க வைத்து ஊழியத்தில் அவருக்கு உதவி செய்தார்கள்.

பவுல் எபேசுக்கு போனபோது இவர்களும் அவரோடுகூட போனார்கள். அவர் எபேசுவை விட்டு போனபோது பிரிஸ்கில்லாவும் ஆக்கிலாவும் எபேசிலே தங்கி **அவர்களுடைய வீட்டை** சபை நடத்த கொடுத்தார்கள் ( 1 கொரி 16:19)

அவர்கள் பவுலோடு இருந்த நாட்களிலே அநேக சத்தியங்களை கற்றுக்கொண்டார்கள். அப்போது அலேக் சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் சாதுர்யவானும், வேதாகமங்களில் வல்லவனுமான **அப்பல்லோ** என்னும் யூதன் கர்த்தருடைய மார்கத்திலே உபதேசிக்கப்பட்டு கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாய் ஆவியில் அனலுள்ளவனாய் கர்த்தருக்கடுத்தவைகளை திட்டமாய் போதகம பண்ணிக்கொண்டு வந்தான். அவன் ஜெப ஆலயத்தில் தைரியமாய் பேசுகிறதை ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாலும் கேட்டு அவனை தங்கலோடு சேர்த்துகொண்டு தேவனுடைய கிறிஸ்தவ மார்க்கத்தை அவனுக்கு விவரித்து காண்பித்தார்கள். அதன்பின் அவன் இயேசுவேகிறிஸ்து என்று போதித்து கிருபையினாலே விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாய் இருந்தான். (அப். 18:24-28)

**நிம்பா வீட்டு சபை**

லவோதிக்கேயாவில் இருக்கிற சகோதரரையும் **நிம்பாவையும்** அவன் **வீட்டில் கூடுகிற சபையையும்** வாழ்த்துங்கள். ( கொலோ. 4:15) என்று பவுல் குறிப்பிடுகிறார்.

கொலோசேவிலுள்ள கிறிஸ்தவலர்களுக்கு பவுல் இந்த நிருபத்தை (கடிதத்தை) எழுதியபோது லவோதேக்கியாவிலுள்ள விசுவாசிகளை வாழ்த்தி எழுதுகிறார். மேலும் இந்த கடிதம் நிம்பாவின் பெயரையும் குறிப்பிடுகிறது. **இவனுடைய வீடும்** சபை **கூடுகிற இடமாக** மாறியது. பவுல் லவோதிக்கியாவிலுள்ள சபைக்கு தனி நிருபம் எழுதினார் என்று கொலேசேயருக்கு எழுதிய நிருபம் குறிப்பிடுகிறது. லவோதிக்கியா சபையும் கொலோசேய சபையும் அவர்களுடைய நிருபங்களையும் ஒருவருக்கொருவர் ஆவிக்குரிய விஷயங்களை பகிர்ந்துகொண்டார்கள். பவுல் **லவோதிக்கியருக்கு** எழுதிய **கடிதம் நமக்கு கிடைக்காமல் போனதால்** நிம்பாவை குறித்து **அவனுடைய வீட்டு சபையை** குறித்தும் அதிகமாக தெரியாமல் போனது.

**பிலோமோன், அப்பியால் வீட்டு சபை**

கிறிஸ்து இயேசுவின் நிமித்தம் கட்டப்பட்டவராயிருக்கிற பவுலும் சகோதரனாகிய தீமோதேயும் எங்களுக்கு பிரியமுள்ளவனும் உடன் வேலையாளுமாயிருக்கிற பிலோமோனுக்கும் பிரியமுள்ள அப்பியாளுக்கும் எங்களுடன் போர் சேவகனாகிய அர்க்கிப்புக்கும் **உம்முடைய வீட்டிலே கூடிவருகிற சபைக்கு**ம் எழுதுகிறதாவது: (பிலேமோன் 1-2) என்று பவுல் தன் கடிதத்தில் குறிப்பிடுகிறார்.

கொலோசே பட்டணத்தைச் சேர்ந்த பிலமோனும், அப்பியாளும் பவுல் அப்போஸ்தலனுடைய ஊழியத்தின் மூலமாக கிறிஸ்தவர்களானார்கள் (வசனம் 4-7) பவுலுடைய உடன் ஊழியக்காரனான அர்க்கிப்பு (கொலோசெயர் 4:17) பிலேமோன் வசனம் 2) இவர்களுடைய மகனாக இருக்கக்கூடும் என்பது சில வேதப் பண்டிதர்களின் கூற்றாகும். பவுல் **பிலேமோனுக்கு** எழுதிய **சிறிய நிருபம்** வேதத்தில் **மிகவும் விசேஷமானதாக** இருக்கிறது. இது பிலேமோனையும் அப்பியாளையும் விட்டு ஓடிப்போன ஒநேசிமு என்ற அடிமையைக்குறித்து எழுதப்பட்ட விசேஷமான நிருபமாகும். எதிர்பாராதவிதமாக **ஒநேசிமு** பவுலை ஜெயிலில் சந்தித்து. அவர் மூலமாக இரட்சிப்புக்குள் வழி நடத்தப்பட்டவனாயிருந்தான். அதன் பிறகு பவுல் ஒநேசிமுவை விரட்டியடித்து ஜெயிலுக்கு அனுப்பிய அவனுடைய **எஜமான் பிலேமோனிடத்திற்கே** திரும்ப அனுப்பி வைக்கிறார் (வசனம் 15) எத்தனை அற்புதமான சம்பவம் இது. இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒநேசிமு இப்போது தன் எஜமான் வீட்டில் கிறிஸ்துவுக்குள் சகோதரன் எனப்பட்டு நம்பிக்கைக்கு பாத்திரமுள்ளவனாக மாறினான்.

ஒநேசிமுவும் தீகிக்கும் பவுல் எழுதிய கடிதத்தைக் கொண்டுப்போனார்கள் (கொலோசெயர் 4:7-9) லவோதிக்கியா கொலோசெ பட்டணத்திலிருந்து 10 மைல் தூரத்தில் இருந்ததால் அங்கேயும் இந்த நிருபம் வாசிக்கப்படவேண்டும் என்று பவுல் கேட்டுக்கொண்டார். **பலேமோனும்** அப்பியாளும் நிம்பாவை அறிந்திருந்ததினால் தங்கள் **வீடுகளை சபைகள் நடத்தத்** திறந்துக்கொடுத்தவர்களாயிருந்தார்கள்.

**மற்ற வீட்டு சபைகள் ? :** புதிய ஏற்பாட்டுக் காலத்தின் **வீட்டு சபைகளைக்**குறித்த விவரங்கள் நம்மிடத்தில் இல்லை. அவர்களுடைய வீடுகள் எவ்வளவு பெரியவைகள்? அவர்கள் ஆராதனையை எவ்விதமாய் செய்தார்கள்? எவ்வளவு இடைவெளியில் கிறிஸ்தவர்கள் கூடினார்கள்? அவர்களுக்கு போதுமான உதவிகள் கிடைத்தனவா? அவர்களுடைய கூட்டங்களை எப்படி ஒழுங்கு செய்தார்கள்?

அவர்களுடைய குடும்பங்கள் எப்படிப்பட்டவைகள்? இப்படியாக புதிய ஏற்பாட்டில் **வீட்டு சபைகளைக்குறித்த** விவரங்கள் **அவைகளின் செயல்பாடுகள்** அவைகளை **நடத்தியவர்கள் யார்** போன்ற விவரங்கள் கொடுக்கப்படவில்லையென்றாலும் அவைகளைக் குறித்து தியானிப்பது நல்லது.

ஆதிக்கிறிஸ்தவர்கள் சபை கூடுதலுக்கு **தங்கள் வீடுகளைத்** திறந்துக்கொடுத்த தியாகத்தினால் **சபைகள் வேர்கொண்டு** வளர்ந்தன என்பதும் உண்மையாகும். நாளடைவில் **விசுவாசிகளின் எண்ணீககை பெருகினபோது** அவர்கள் சபை கூடதலுக்கென **தனி சபை கட்டிடங்களை** கட்டிக்கொண்டார்கள்.

ஆனால் இப்போதோ அநேக இடங்களில் விசுவாசிகள் பெருக்கத்திற்கேற்றவாறு **வீட்டு சபைகள்** ஸ்தாபிப்பதற்கான தரிசனம் மங்கிப்போயின. இருப்பினும் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் **வீட்டு சபைகளின்** ஆவிக்குரிய தாக்கம் இன்றளவும் குறைந்து விடவில்லை. விசுவாசத்தையும் தினந்தோரும் வாழ்க்கையில் கிறிஸ்தவ சாட்சியில் வளரவும் செய்கின்றன.

ஆதி திருச்சபை நாட்களில் விசுவாசிகள் சொல்லொனா பாடுகளை அனுபவித்து வந்த நாட்களில் **மரியாள்,லீதியாள்,நிம்பா,ஆக்கில்லா,பிரிஸ்கில்லா** மற்றும் பிலேமோன். அப்பியாள் போன்றோர் கர்த்தரில் தைரியமுள்ளவர்களாயிருந்து தங்கள் வீடுகளில் கிறிஸ்துவின் நாமத்தில் சபை கூடிவந்து பரிபூரணமாகக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தவர்கள் கிறிஸ்துவின் சபையை உண்மையோடு கட்டினார்கள் என்பதற்கு முன்னுதாரணமாய் இருக்கிறார்கள்.

கேரளாவில் ஆலபுழா, காயம்குளத்தில் Dr. தாமஸ் அவர்களின் வீடு பத்தினம்திட்டா. கோட்டயம். மாங்ஙானம். கோழச்சேரி. கார்த்திகாபள்ளி, பத்தனாபுரம், எலந்தூர், தென்கேமலா. நெடுங்காடப்பள்ளி, மல்லப்பள்ளி, கோடுகுளஞ்ஜி, குருப்பம்படி. பெரும்பாவூர், ஆலுவாய். UC காலேஜ் Quarters, எலம்பல், ராந்நி. புனலூர். பேரையாம், குண்டாரா, எல்லும்புரம், மூவாற்றுபுழா. மேலுக்காவு, திருவல்லா, பல இடங்களில் உள்ள வீடுகளில் கூடும் ஜெபக்கூட்டம். காவும்பாகம் முண்டயபள்ளி வடவாதூர், கீலிள்ளம். கோழிக்கோடு. முண்டகாயம் 91ம் மைல், குமுளி, பாலக்காடு, ஷோரனூர் இன்னும் ஏராளமான ஊர்களில் கிராமங்களில் உள்ள வீடுகளில் நடக்கும் சிறு ஜெப கூட்டங்களில் நான் பல முறை பங்கெடுத்துள்ளேன். இன்றும் அந்த வீடுகளில் கூட்டம் விசுவாசத்தில் வளர்ந்து சபைக்கும் நாட்டுக்காரர்களுக்கும் சாட்சியாக வாழ்கிறார்கள்.

கடந்த 2 மாதங்களுக்குமுன் கோட்டயம், திருவள்ளா, திருப்பூர் பாகங்களில் உள்ள வீட்டு ஸ்தோத்திர கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டேன். ஒவ்வொரு வீட்டிலும் நான் வருகிறேன் என்று அறிந்ததால் வீட்டு கூட்டம் ஒரு கன்வென்ஷன் கூட்டம் போல் வீட்டிலும் வெளியிலும் விசுவாசிகள் உட்கார முடியாமல் வசனத்தை கேட்க அத்தனை ஆவல் காட்டினார்கள். திருவனந்தபுரத்தில் Dr. Prem வீட்டில் சின்னதாய் வாரம் ஒரு முறை கூடின கூட்டம் நான் ஆரம்பித்து வைத்ததாகும். அது இன்று ஆலமரம் போல் வளர்ந்து ஜனங்கள் உட்கார இடமில்லாமல் வசனத்தில் வளர்ந்து இன்று Church in Trivandram என்ற பெயரில் மிகப் பெரிய கிறிஸ்துவின் சபையாய் வளர்ந்துள்ளதை கண்டபோது ஆதி திருச்சபைதான் ஞாபகத்தில் வந்தது. இவர்கள் அதேபோல கேரளாவில் திருவனந்தபுரம் ஜில்லாவில் சில இடங்களிலும் ஜெபகூட்டம் பரவி கொல்லம் வரை வளர்ந்து பெருகிவிட்டதை கண்டு கர்த்தரை துதிக்கிறேன்.

தமிழ்நாட்டிலும் சென்னை 14 இடங்கள். பாண்டிச்சேரி, ஜிப்மர் ஆஸ்பத்திரி Quarteres யில் உள்ள வீடுகளிலும் திருநெல்வேலியில் பாளையம்கோட்டை, மதுரையில் 11 இடங்கள், திண்டுக்கல்லில் 2 வீடுகள். நெய்வேலி, சேலம் சுற்றுவடடாரங்களில், பெங்களூரில் மட்டும் 23 இடங்களில், கன்னியாகுமரி மாவட்டத்தில் பல ஊர்களில் மிக அதிகமான வீடுகளில் ஜெககூடுகைகளில் பிரித்தெடுக்கப்பட்ட விசுவாசிகளாக கூடி ஜெபிப்பது ஆதி சபைகளை ஞாபகப்படுத்துகிறது. இப்படிப்பட்ட கூடுகையில் கூடும் மக்கள் பல்வேறுசபையில் இருந்தாலும் உபதேச குழப்பங்களில் அகப்படாமல் தங்கள் ஆத்துமாக்கவை இப்படி கூடிவரவு மூலமாக காத்துக்கொள்கிறார்கள். எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் இப்படிப்பட்ட வீட்டு கூடுகைகளை சந்தித்து வசனத்தில் பெலப்படுத்தி வருகிறேன். இவர்கள் யாரும் வேறு யாரையும் தங்கள் கூடுகையில் பிரசங்கம் செய்ய அனுமதிப்பதில்லை. அப்படி பிரசங்கிப்பவர்கள் தங்களை உபதேச குழப்பத்தில் அகப்படுத்தி வசனத்திலிருந்து விலகிவிடக்கூடாதே என்று மிக ஜக்கிறதையாக இருக்கிறார்கள்.

## எல்லா நாளும் எல்லா நிமிடமும் புது வருட கொண்டாட்டம்

இயேசு கிறிஸ்துவை உண்மையாய் ஏற்றுக்கொண்டு மனந்திரும்பி வாழும் கிறிஸ்தவர்களுக்கு ஒவ்வொரு நாள் தூங்கி எழும் காலையெல்லாம் புதிய நாள் புதிய வருடம் புதிய ஆயுள் என்ற உணர்வில் புது வருட சந்தோஷத்தையும் புதிய நாளை உயிரோடு காணச்செய்த தெய்வத்துக்கு நன்றி கூறியும் துதி ஏறெடுப்போம்.

அப்படியே ஒவ்வொரு நாளும கிறிஸ்துமஸ்தான். ஒவ்வொரு நாளும் கல்வாரியில் கிறிஸ்து சிந்திய இரத்த்தையும் உயிரோடு எழுந்ததையும். இப்போதும் இயேசு உயிரோடிருக்கிறார். என்ற உணர்வும் உண்மை கிறிஸ்தவனுக்கு உண்டாகும். ஆகவே எல்லா மாதமும் எல்லா நாளும் எல்லா நிமிடமும் அல்லது நினைக்கும் போதெல்லாம் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்.

இப்படிப்பட்ட கிருபையும், சந்தோஷமும் மனம் திரும்பின கிறிஸ்தவன் மட்டுமே அனுபவிக்க முடியும். வீட்டில் மரணம் வியாதி தோல்வியின் மத்தியிலும் கர்த்தர் கொடுத்த நாளுக்காக துதித்து மகிழமுடியும். கர்த்தருடைய கிருபை என்றும் உள்ளது. ஆமென்!

**JANUARY - 2019**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.